
இந்திய விடுதலைப் போராட்ட வீரரும்
தமிழக கம்யூனிஸ்ட் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவருமான



மலர்ந்தது : 15-06-1915 உதிர்ந்தது : 30-07-1999

# தியாகி. சி.பி. இளங்கோ

விழா நாள் 05-09-2015 சனிக்கிழமை
பிற்பகல் 4.00 மணி
இடம் : காமரின் இன்டர்நேஷனல் ஸ்கூல்
ஆரல்வாய்மொழி

# நூற்றாண்டு விழா மலர்

வெளியீடு
நூற்றாண்டு விழாக்குழு.




**தாமிரபத்திர போட்டோ நகல்**

இந்திய சுதந்திர வெள்ளிவிழா நிகழ்ச்சி ஆகஸ்ட் 15, 1972-ல் டெல்லியில் நடைபெற்றபோது ஜனாதிபதி வி.வி. கிரி, பாரதப் பிரதமர் இந்திரா காந்தியால் சி.பி. இளங்கோவிற்கு தாமிரப்பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும்
தமிழக கம்யூனிஸ்ட் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவருமான

# தியாகி. சி.பி. இளங்கோ

## நூற்றாண்டு விழா மலர்

வெளியீடு : **நூற்றாண்டு விழாக்குழு.**

அச்சிட்டோர் : நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்
61/1 கோர்ட் ரோடு
நாகர்கோவில்.
✆: 04652 - 233853



தியாகி சி.பி. இளங்கோ நூற்றாண்டு விழா வெற்றிபெற வாழ்த்தும்
மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவின் நல்லாசிகள்.


# நினைவுகள் அழிவதில்லை

## புகைப்படங்களின் தொகுப்பு

**மகன் குடும்பத்தினருடன் இளங்கோ**



தமது மகன்களுடன் சி.பி இளங்கோ
இடமிருந்து சிறுவனாக பொறியாளர் லெட்சுமணன், சி.பி இளங்கோ, மூத்த மகன் சந்திரமோகன் - பின்னால் சிறுவனாக பொறியாளர் விசுவநாதன், கோபாலன்.



சி.பி. இளங்கோ மகன் சந்திரமோகன் திருமண வரவேற்பு - சித்ரா நூல் நிலையம் முன்வரிசை இடமிருந்து சி.பி. இளங்கோவுடன் நிருபர் - சீனிவாசன்



சி.பி. இளங்கோ மூத்த புதல்வன் சந்திரமோகன் - மனைவி மரியசார்லெட், தம்பி ஸ்டாலின் வினோத் - அருணாலெட்சுமியுடன் சி.பி. இளங்கோ



சி.பி. இளங்கோ தனது பேரன் வினோத் - அருண், அருணாலெட்சுமியுடன் உள்ளார்.

புகைப்படம் தொடர்ச்சி பக்கம் 41

## தியாகி சி.பி. இளங்கோ - நூற்றாண்டு விழா மலரை முகர்வதற்கு முன்பாக

அரிது - அரிது மானிடராய்
பிறத்தல் அரிது
மானிடராய் பிறத்தலினும்
கூன், குருடு, செவிடு
நீங்கிப் பிறத்தல் அரிது
கூன் குருடு செவிடு நீங்கி
பிறந்த காலையில்
தானமும் - தவமும்
தான் செய்தல் அரிது
தானமும் - தவமும்
தான் செய்வராயின்
வானவர் நாடு
வழி திறந்திடுமே - என்பது பழந்தமிழ்ப் பாட்டு

தியாகி சி.பி. இளங்கோ சராசரி மனிதனைப்போல் வெந்ததைத் தின்று - விதி வந்தால் சாவோம் என்கிற வகையைச் சாராதவர்.

உலகிலேயே உயர்ந்த வார்த்தை - சொல் "மனிதன்" - என்றானே மார்க்சிம் கார்க்கி அந்த வகையான மனிதன்.

சி.பி. இளங்கோவின் வரலாறு - வாழ்க்கை
என்பது - மக்களாட்சி - ஜனநாயகம்
சமதர்மம் - மலர்ந்திட - மன்னராட்சி,
ஏகாதிபத்திய ஆட்சி,
முதலாளித்துவ ஆட்சிகளுக்கு
எதிராய் - காங்கிரஸ், காங்கிரஸ் சோஷலிஸ்ட்,
கம்யூனிஸ்ட் - என - பரிணாம வளர்ச்சியின்
ஊடே - தனது வாழ்நாளெல்லாம்
போராட்டமே வாழ்க்கையாக வாழ்ந்த வரலாறு.

விடுதலை வேட்கை உள்ளோர் - படிக்க வேண்டிய - அதன் பாதையில் பயணிக்க வேண்டிய வரலாறு. இந்த விழா மலரை முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு வெளியிட தேசப்பற்றும் - தமிழ் உணர்வும் மிக்க - தேசியத் தலைவர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பெற்றுக்கொள்வது - சாலப் பொருத்தமானது.

மலரில் மணம் பரப்பியவர்களுக்கும் மிகச்சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த நாஞ்சில் ஆப்செட் அச்சகத்தார், பணியாளர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவினர் தலைவர், புரவலர், ஒருங்கிணைப்பாளர் மலர் வெளியீட்டுக்குழு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

**தியாகி. சி.பி. இளங்கோ**
நூற்றாண்டு விழாக்குழு

கவிதாஞ்சலி

# தாத்தாவும் நானும்

எட்டும் ஆணாய்ப் பிறந்ததால்
செல்ல மகள் இல்லையென்ற
ஆதங்கம் இருந்திருக்கும் தானே
தாத்தா.....!
முதல் செல்லப் பேத்தியாய்
பிறந்து மகிழ வைத்ததில்
மகிழ்ச்சி தாத்தா.....!
நினைத்ததும் நினைவுக்கு வருவது
நீங்கள் அல்ல.
நீங்கள் என்னைக் கொஞ்சும் போது
என்னைக் குத்திய தாடிதான் தாத்தா.....!
உங்கள் பாசமும்
புன்னகை முகமும்
உங்கள் கதர் ஆடையும்
அழியாத நினைவுகள் தாத்தா.....!
பிறந்த நாளுக்கு நீங்கள் பரிசளித்த
சின்ன முத்துக் குடம்
நினைவுபடுத்துகிறது
நீங்கள் என்னுடன் இருப்பதை
நீங்கள் எங்களுடன் இருக்கும்
புகைப்படம் என்றும் புன்னகைக்கும்.....
நாட்டுக்காக உழைத்த
மகான் என் தாத்தா
சுதந்திரக் காற்றுக்காய்
ஒன்பது வருடம்
சிறையில் அடைபட்டவர்
என் தாத்தா.....!
என்ன தவம் செய்தேனோ
இப்பெயர் எனக்குக் கிடைத்தமைக்கு....!
முதல் கொள்ளுப் பேரன்
பிறந்து விட்டான் தாத்தா
வாழ்த்திடத்தான் கேட்கிறேன் தாத்தா
நீங்கள்
எட்டாதூரம் செல்லவில்லை
என்ற நம்பிக்கையில்.....!



அருணாலெட்சுமி

# ஒரு புரட்சியாளரின் இளமைப்பயணம்

- பொன்னீலன்

குமரி மாவட்டம் பழைய திருவாங்கூரில் இருந்து பிரிக்கப்படாத காலம். உயர் சாதிமக்கள் வாழும் தெருக்களில் அடித்தளச்சாதியினர் நடப்பதைச் சில சாதிவெறியர்கள் பொறுத்துக் கொள்ளாத காலம். இக்கொடுமையை எதிர்த்துச் சுசீந்திரம் ஊர்த் தெருக்களில் அடித்தள மக்கள் நுழைய அன்றைய காங்கிரசார் போராடிக்கொண்டிருந்த சூழல். தீவிர காங்கிரஸ் காரராக இருந்த எம்.இ. நாயுடு அவர்களின் வழிகாட்டுதலில் அணி அணியாக காங்கிரஸ் தலைவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள்.

ஜீவா அப்போது கோட்டாறு அரசுப் பள்ளி மாணவர். சுதந்திரப் போராட்ட வேகம் நிறைந்த மாணவர். போராடும் பெரியவர்களின் பின்னால் இவரும் முழக்கங்கள் எழுப்பிக் கொண்டு போனார். போலீஸ்காரர்கள் இவரையும் பிடித்து நையப்புடைத்து இடலாக்குடி காவல் நிலையச் சிறையில் அடைத்தார்கள்.


சிறையில் ஒருநாள் திடீரென்று இன்னொரு இளைஞர் தன்மீது விழவே, நிமிர்ந்து உட்கார்ந்தார் ஜீவா. தன் மீது விழுந்த புதிய இளைஞனைப் பார்த்துக் கேட்கிறார் அவர், "நீ எங்கயிருந்துலே?"

"நான் செறமடத்தில் இருந்து"

"யாரு லே நீ?"

"என் பேரு கிருஷ்ணன். சிறமடம் பிரம்மநாயகம் பிள்ளை மகன்."

"அப்படியா, ஏலே எம் பேரு சொரிமுத்து. சொந்த ஊரு பூதப்பாண்டி. எங்கப்பா பேரு பட்டம்பிள்ளை."



இப்படிதான் ஜீவாவும் சி.பி. இளங்கோவும் போராட்ட காலத்தில் முதன்முதலாகப் பிடிபட்டு, அடிபட்டு, ஜெயிலில் சந்தித்து நண்பர்களானார்கள்.

இந்தச் செய்தியை எனக்கு சொன்னவர் காலம் முழுவதும் கம்யூனிஸ்டாகக் களத்தில் நின்றவர், கம்யூனிஸ்ட் கட்சி பிளவுண்ட பின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, வீரியமிக்கத் தோழராக வளர்ந்தவர், தக்கலை எம்.எம். அலி அவர்கள்.

ஜீவாவுக்கும் இளங்கோவுக்கும் அன்று ஏற்பட்ட நட்பு ஜீவா வாழ்ந்த காலம் முழுவதும் வளர்பிறையாகவே ஒளி சிந்தியது.

என் யூகம், ஜீவா வைக்கம் போராட்டத்திற்குச் சென்ற போது இளங்கோவும் உடன் சென்றிருக்க வேண்டும். திரும்பி வந்த இருவரும் ஊரிலிருந்து துரத்தப்பட்டு, சேரன்மாதேவி குருகுலத்தில் பயிற்சி பெற்று, அங்கிருந்து சிராவயல் சென்றிருக்க வேண்டும். சிராவயல் பள்ளியின் அன்றைய தலைமை ஆசிரியர் கே. கும்பலிங்கம் பிள்ளை. ஜீவாவுடன் அங்கே இளங்கோவும் ஒரு ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். அன்று அவர்கள் சொரிமுத்துவும், கிருஷ்ணனும்.

சிராவயல் ஆசிரமம்தான் ஜீவாவின் தமிழ்ப் பல்கலைக்கழகமாக அன்று அமைந்தது. பக்கத்துப் பெரிய ஊர் காரைக்குடி. தெருவெல்லாம் தமிழ்

விளைந்து கிடக்கும் நல்லூர். சிராவயலின் கிழக்குப் பக்கம் சிவகங்கை. திராவிட சிந்தனை அன்று அடர்ந்து வளர்ந்திருந்த செழிப்பான நிலம். இந்த ஊர்களின் பாதிப்பு ஜீவாவை படிப்படியாக தமிழ் அறிஞராக, சுயமரியாதைச் சிந்தனையாளராகப் பரிணாமம் கொள்ளச் செய்தது. இளங்கோவையும் பரிமாணம் கொள்ளச் செய்திருக்கும்.

அந்த ஊருக்குச் சென்று, ஜீவாவிடம் அவர்காலத்தில் படித்த கண்ணகியை 2006-ல் நானும் வள்ளியூர் சங்கரநாராயணனும் சந்தித்தோம். 90 வயதைக் கடந்துவிட்ட மூதாட்டி அவர். முதுகு கூனி உடம்பெல்லாம் சுருக்கங்கள் விழுந்த அந்த எலும்பு மூதாட்டி ஒரு வரலாற்றுப் புதையல். அவரிடமிருந்து தான் ஜீவா அங்கே தனியாகப் போகவில்லை என்பதையும், இளங்கோவையும் அங்கே அழைத்துச் சென்றிருக்கிறார் என்பதையும் அறிந்தோம். அதுமட்டுமல்ல, ஜீவாவின் ஆரம்பகால நண்பர் மண்ணடி மாணிக்கத்தையும் அவர் அழைத்துச் சென்றிருக்கிறார் என்பதையும் அறிந்தோம். கண்ணகி என்ற அந்த மூதாட்டியிடம் கேட்டவற்றில் சில:

சிராவயலில் தான் கண்ணாயி என்ற அந்த மூதாட்டியின் பெயரைக் கண்ணகி என ஜீவா மாற்றினார். சொரிமுத்து என்னும் தன் பெயரையும் ஜீவானந்தம் என மாற்றினார் அவர். கிருஷ்ணன் என்னும் பெயரையும் இளங்கோ என ஜீவா மாற்றியது அங்கு தான். இன்னும் பல பெயர்களையும் அழகிய தமிழ்ப் பெயர்களாக மாற்றியிருக்கிறார் ஜீவா.

என்ன தெரிகிறது? சி.பி. இளங்கோவைத்தான் போகும் இடமெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறார் ஜீவா. அரசியல் மற்றும் சமூகப் போராட்டங்களிலெல்லாம் இருவரும் சேர்ந்தே களம் இறங்கியிருக்கிறார்கள். என்ன வேறுபாடு இருவருக்குள்ளும்? ஜீவா பல்லாயிரக் கணக்கானோரைக் கவரும் பெரும் பேச்சாளர். அத்துணைப் பேச்சு வன்மை இளங்கோவுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இலக்கிய ஆழத்திலும் ஜீவாவுக்கும் இளங்கோவுக்கும் இடையே சிறிய வேறுபாடு இருந்திருக்கிறது. ஒரு நுகத்துக் காளைகள் போல் கட்சிப்பணிகளை இருவரும் இணைந்தே செய்திருக்கிறார்கள். அன்றைய கேரளத்திலும் தமிழகத்திலும் இளங்கோ ஒரு முக்கியமான கம்யூனிஸ்ட் தலைவராக செயல்பட்டார், பேசப்பட்டார், பாராட்டப்பட்டார்.

தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டபோது, அதில் ஆரம்பகால உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்கள் ஜீவாவும் இளங்கோவும்.

ஜீவா நாடுகடத்தப்பட்டு பூதப்பாண்டிக்கு வந்தபோது, நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில் வாலிபர் சங்கங்கள் அமைப்பதன் மூலம் சாதி, சமயம், கடந்த மனிதநேயக் கருத்துக்களை இளைஞர்களிடம் பரப்ப முடியும், இலக்கியம் அதற்கு ஒரு ஊடகமாக இருக்க முடியும் என ஜீவாவும் இளங்கோவும் நம்பினார்கள். இந்தப் பரப்புதல்கள் வழி சுரண்டலுக்கு எதிரான, வன்முறைக்கு எதிரான போராட்ட உணர்வை இளைஞர்களுக்கு ஊட்ட முடியும் எனவும் இருவரும் நம்பினர்.

இந்தப் பணிகளிலெல்லாம் ஜீவாவுக்குப் போல இளங்கோவுக்கும் முக்கிய பங்கு இருந்தது என்கிறார் தாமரைகுளம் தந்த கம்யூனிஸ்ட் தோழரும், தன் ஆற்றல் முழுவதையும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்குப் போர்க்களத்தில் செலவிட்டவருமான சோமசுந்தரம் என்னும் சோமு அண்ணாச்சி. இளங்கோ மற்றும் ஜீவாவின் பேச்சுக்களால் கவரப்பட்டுக் கட்சிக்கு வந்தவன் நான் எனப் பெருமிதத்தோடு சொல்லுகிறார் அவர்.

அக்காலத்தில் நாஞ்சில் நாட்டு பகுதிகளில் ஜீவா இளங்கோ கால்படாத இடமே இல்லை. ஜீவாவும் இளங்கோவும் தங்கள் பேச்சுக்களாலும் செய்கைகளாலும் இளைஞர்களின் இதயங்களை, எல்லோருக்கும் எல்லாம் என்னும் மனித நேயத் திசை வழியில் மலர்வித்தார்கள். இவ்வாறு மலர்விக்கப்பட்டவர்களைக் கம்யூனிஸ்ட் கட்சியில்

இணைக்கும் ஆற்றல் உள்ள அமைப்பாளர்கள் அன்று ஜீவாவையும் இளங்கோவையும் பின் தொடர்ந்து அமைப்புப் பணி எதுவும் செய்ய வில்லையென ஆதங்கப்பட்டார் தோழர் எம்.எம். அலி.

நாகர்கோவிலில் கலை இலக்கியப் பெருமன்றப் பணிகளில் நான் 1970-களில் இணைந்தபோது, இளங்கோ அண்ணாச்சியை அடிக்கடிச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மூத்த தோழர்கள் வாயிலாக அவருடைய பல்வேறு சாதனைகளை அறிய அப்போது முடிந்தது.

அக்காலங்களில் இஸ்கஸ் கூட்டங்களிலும் விழாக்களிலும் இளங்கோ அண்ணாச்சி ஆர்வத்தோடு பங்கெடுத்தார். கூட்டங்களில் இந்திய சோவியத் நட்புறவு பற்றி விரிவாக விளக்கினார். கலை இலக்கியப் பெருமன்றக் கூட்டங்களிலோ, விழாக்களிலோ அத்துணைத் தீவிரம் காட்டியதாக எனக்கு நினைவில்லை.

அம்மாமனிதனின் நூற்றாண்டையொட்டி, அவருடைய குடும்பத்தினர் அவருக்குச் சிறப்பான ஒரு விழா எடுக்கவும், அந்த விழாவில் அவரைப் பற்றிய ஒரு சிறப்புமலர் வெளியிடவும் தீர்மானித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. சகல மக்களுக்குமான பொது லட்சியங்களோடு, மக்களுக்காக மக்களோடு இணைந்து போராடியவர்கள் திரும்பத்திரும்ப நினைக்கப்பட வேண்டும். அப்படி நினைக்கப்படுவது அந்த மாமனிதர்களின் பேருணர்வுகளை இளம் தலைமுறையினருக்கு ஊட்டுவதாக அமையும்.

தியாகி சி.பி. இளங்கோ அவர்களின் அருமை மக்கள் மற்றும் தோழர்கள் செய்யும் இந்த மாபெரும் தொண்டு வரும் வரும் தலைமுறைகளை உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

## வ.உ.சி எச்சரிக்கை

சி.பி. இளங்கோவின் மீது காவல்துறை நாட்குறிப்பைத் திருடியதாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல்துறை ஆவணங்களில் சி.பி. இளங்கோ ஒரு சிறந்த சொற்பொழிவாளர் என்றும் காவல்துறையை எப்போதும் விமர்சிப்பவராகவும் பதிவு செய்யப்பட்டிருந்தார். காவல் கஸ்டடியில் சி.பி. இளங்கோவிற்கு ஆபத்து ஏற்படும் என்பதை யூகித்த எஸ்.என். சோமயாஜுலு இந்த வழக்கு பற்றி உடனடியாக வ.உ.சிக்கு தகவல் தெரிவித்தார். வ.உ.சி. தகவல் கிடைத்ததும் உடனடியாக தன் வக்கீல் சீருடையோடு காவல்நிலையம் சென்றார். அப்போதைய சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் நீதிபதி திரு. காதர் பாட்ஷா அவர்களை சந்தித்து சி.பி. இளங்கோவை பாதுகாக்குமாறும், இளங்கோவுக்கு ஏதேனும் நேருமானால் அரசு நெருக்கடிகளை சந்திக்க வேண்டியதிருக்கும் என எச்சரித்தார்.

(எஸ்.என். சோமயாஜுலு - நெல்லை மாவட்ட சுதந்திர போராட்ட வரலாறு - மெட்ராஸ் 1976. பக் - 109)

## வ.வே.சு ஐயர் ஆசிரமப் போராட்டம்

சேரன்மாதேவியில் வ.வே.சு ஐயர் பரத்வாஜ ஆசிரமம் நடத்திக் கொண்டிருந்த போது பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு தனியாக உணவு பரிமாறப்பட்டதை அறிந்து ஈ.வே.ரா. பெரியார் போராட்டத்தைத் தொடங்கினார். சி.பி. இளங்கோ இந்த போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து போராட்டத்தை ஆதரித்தார். இதில் பெரியாருடன் இளங்கோவிற்கு நட்பு உருவானது. போராட்டத்தின் முடிவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வ.வே.சு. ஐயரின் ஆசிரமத்திற்கு அளித்திருந்த நிதியைத் திரும்பக் கேட்டது. நிதி பற்றாக்குறையால் பிற்பாடு ஆசிரமம் மூடப்பட்டது.

# தியாகி சி.பி. இளங்கோ

- நிருபர் சீனிவாசன்

என் துணைவியார் திருமதி ப. அய்யம்மாள் ஆட்சி நாற்காலிகளில் இருந்தவர்களால் கோபி செட்டிப்பாளையிலிருந்து துரத்தப்பட்டு நாகர்கோவில் அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றுதலாகிப் பணியில் இருந்தார். காலம் 1982. தியாகி சி.பி. இளங்கோ அவரை மருத்துவ மனையில் சந்தித்தார்.

என் கணவர் கோபிசெட்டிப்பாளையத்தில் வீடு இல்லாத ஏழை மக்களுக்குக் கோவில் நிலத்தில் குடிசை போட்டுக்கொள்ள வாய்ப்பளித்தார். தொடக்க முயற்சி சி.பி. அய்., சி.பி.அய்.எம். கட்சி அமைப்பினர். குடிசைகள் போட முயன்றவர்கள், உதவியாக இருந்த பொதுவுடமை அமைப்பினர் நள்ளிரவில் என் கணவரைச் சந்தித்தனர். அழைத்து வந்தவர் நக்சல்பாரிகளின் ஆதரவாளர் தோழர் கே.கே.ஆர். போராட்டம் நடந்தது. வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில். வழக்கறிஞர் சீர்திருத்தக் காங்கிரஸ்காரர் செல்வராஜ், அவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர். ஆலோசகர் பிரபல வழக்கறிஞர் சி.பி. அய். வானமாமலை. தீர்ப்பு ஏழைகள் பக்கம்.

ரௌடிகள், காக்கிகள் வன்முறையில் ஈடுபட்டனர். குடிசைகளைப் பிரித்து விட்டனர். கோபி அரசாங்க மருத்துவமனையில் செவிலியராக வேலை செய்த என்னை நாகர்கோவிலுக்கு மாற்றுதல் செய்தனர். எங்களைக் கொலை செய்ய முயன்றனர். வீடு அடித்து நொறுக்கப்பட்டது. தப்பித்தோம் பிழைத்தோம் என நாகர்கோவில் நகருக்கு வந்து அரசாங்க மருத்துவமனையில் வேலை செய்கிறேன்.

என் கணவர் நிருபர் சீனிவாசன் நாகர்கோவில் வந்தார். புரட்சி என நினைத்துக் கொண்டு அவர் செயல்படுகிறார். கடையல் என்கிறார். ஆலஞ்சோலை என்கிறார். சிற்றாறு அணை என்கிறார். மருதம்பாறை என்கிறார். கற்றுவா என்கிறார். அவர் என் பேச்சைக் கேட்கமாட்டார்.

இப்படி என் துணைவியார் சொல்லிக் கொண்டிருந்த போது தியாகி சி.பி. இளங்கோ கண்களில் கண்ணீர் சிந்தியது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "எங்கள் வீட்டில் உங்களுக்கு விருந்து", என அழைத்து ஆதரவு அளித்தார்.

இந்தத் தகவலைத் தருபவர் - என் துணைவியார் ப. அய்யம்மாள்.

தள்ளாத வயதிலும் அவர் முகத்தில் மோரின் கொழுப்புச்சத்து மிளிரும். மரத்திலிருந்து கனிந்த பழத்தின் சதைப் பகுதியாக முகம் திகழும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். சிறைபட்டவர். சித்திரவதைக்கு ஆளானவர். அவரைக் கன்னியாகுமரி மக்கள் தியாகி சி.பி. இளங்கோ எனப் பெருமை அளித்துப் பெருமிதம் கொள்ளுகின்றனர்.

இந்திய சுதந்திரம் 1947 ஆகஸ்ட் 15 என்று சொல்லிக் கொள்ளுகின்றனர். இந்திய நிலத்துக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கூறுகின்றனர். நிலத்துச் சுதந்திரம் கூட முழுமை பெறாமல் பேச்சுவார்த்தை இன்னும் நீடிக்கிறது. விக்டோரியா மகாராணியின் பேரன் இந்தியப் பகுதிகளில் வைத்துச் சென்ற நச்சு

வெடிகுண்டுகள் இன்னும் வெடித்துக் கொண்டு தான் இருக்கிறது. காஷ்மீர், மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், சாதி மதச் சண்டைகள் அந்த வெடிகுண்டுகளில் சில.

இந்திய நிலச் சுதந்திரத்துக்கு மேல் இந்திய மக்களின் பேச்சுரிமை சொத்துரிமை வேலை உரிமை கல்வி உரிமை பொருள் ஒழுக்கம் கலாச்சாரப் பழக்கம் பண்பாடு - இப்படி சமூக மக்களின் உயர்வு கருதி கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. இரண்டாம் சுதந்திரப் போராட்டத்துக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வழிகாட்டியாகச் செயல்பட்டவர் தியாகி சி.பி. இளங்கோ. இவரோடு பணியாற்றியவர்கள் தோழர் ப. ஜீவானந்தம். பெரியவர் தெரிசனங்கோப்பு முத்துக்கருப்பன், பட்டேல் சுந்தரம் போன்ற பெரியவர்கள். இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தில் கன்னியாகுமரியில் கண்ணுக்குத் தெரிபவர்கள் அருமனை ஜான்ரோஸ், மேல்கரை இ. சந்திரமோகன் போன்றவர்கள்.

புரட்சி என்ற பெயரில் நாகர்கோவில் பகுதிகளில் நான் செயல்பட்ட காலம் 1982-2000. ஓர் இளம்பெண் நாகர்கோவிலில் கொலை செய்யப்பட்டாள். தந்தையின் முதலாளியோடு தன் தாய் தகா உறவு கொண்டதைக் கண்டித்ததால் அந்த இளம் பெண் கொலை செய்யப்பட்டாள். கொலை செய்ததாகக் கருதப்பட்டவர்கள் தாய், தந்தை, தந்தையின் முதலாளி. காவல்துறை என்றாலே லஞ்சத்தைப் பாதுகாப்பது, கலெக்டர் மாவட்ட ஆட்சியாளர் கருப்பையா வரை சென்று நான் முறையிட்டேன். லஞ்சத்தைக் கலெக்ட் செய்பவன் கலெக்டர். நான் காவல்துறையால் துன்புறுத்தப்பட்டேன். நடந்தது கொலை என்பதை உளவுத்துறை ஏட்டையா பொன்னுபிள்ளை காவல் தலைமைக்குச் சொன்னதாகத் தகவல். கொலை உண்மையை வெளிப்படுத்தவும், கொலையை அரசாங்கம் மறைப்பதைக் கண்டித்தும், என்னை இம்சைப்படுத்திய காக்கிகளின் மரத்த தோல்களை உரித்துக் காட்டவும் போராடத் தொடங்கினேன். சட்டையைக் கழற்றிக் கோட்டாறு காவல் நிலையம் முன்பு தூக்கி எறிந்தேன்.

கோட்டாறு அஞ்சல் அலுவலகம் அருகில் இருந்த மரக்கடை நடேசன் உதவியும் ஒத்துழைப்பும் நல்கினார். 'நிருபர்' பத்திரிகையில் செய்தி வெளியிட்டேன். தியாகி சி.பி. இளங்கோ, தோழர் சந்திரமோகன், அருமனை ஜான்ரோஸ், குருந்தன்கோடு குடிசை ரத்தினசாமி, மார்த்தாண்டம் கல்லூரிப் பேராசிரியர் தியாகசாமி, பூதப்பாண்டி கருப்புச் சட்டைக்காரர் பிரான்சிஸ் கோட்டாறு அஞ்சல் அதிகாரி இ. வேலாயுதம் போன்றோர் சட்டை அணியாப் போராட்டத்தை ஆதரித்தனர். தியாகி சி.பி. இளங்கோ வீட்டின் அருகில் குறுந்தெருவில் பொதுக்கூட்டம் நடத்தினர். கதர்ச் சட்டை வாங்கிக் கொடுத்தனர். கதர் என்றால் கௌரவம் எனப் பொருள் சொல்வார் காந்தியடிகள். அப்போராட்டத்தில் எனக்கு ஆதரவாக இருந்து உறுதுணை புரிந்தவர் தியாகி சி.பி. இளங்கோ.

நாகர்கோவில் அரசாங்கத் தலைமை மருத்துவமனை காவல்துறை ஆட்சி அலுவலகங்கள் அனைத்தையும் விமர்சித்து சுவரொட்டிப் போராட்டம் நடத்தினேன். கோட்டாறு காவல் நிலைய ஆய்வாளர் பரசுராமனின் படையாட்கள் கைது செய்து அன்று இரவு அவர்களுடன் நான் சண்டையிட்டதால் கொல்லப்பட்டதாக ஒரு திட்டம் போட்டனர். துணைக் கண்காணிப்பாளர் முத்துச்சாமி. பெரிய காவல் அதிகாரி ஜாபர் அலி. உள்துறைச் செயலாளர் நாகராஜன் முதலமைச்சர் மு. கருணாநிதி, உதவியாளர் கோ. சண்முகநாதன், இந்தப் பட்டியலில் இல்லாத தியாகி சி.பி. இளங்கோ, காவல்துறைப் பெரிய அதிகாரி நரேந்திரபால் சிங், அதிகாரிகள் புகழேந்தி, சிதம்பரநாதன் என் உயிரைக் காப்பாற்றியவர்கள். எனக்காகத் துடிப்பாக நின்று செயலாற்றி உதவியவர்கள் கன்னியாகுமரி கோவில் நகைக்காப்பாளர் குடும்பத்தைச் சேர்ந்த மகாதேவன், எமலியாஸ், கருப்புச் சட்டை பிரான்சிஸ், தாசன், தோழர் சந்திரமோகன், திட்டுவிளை குமார்.

கோட்டாறு செட்டித்தெரு சுப்பையன், கோசலை மகள் மாலா நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் அறிவியல் படிக்க ஒரு காசு செலவு செய்யாமல் அனுமதி பெற்றுத் தந்த பெரியவர்

தியாகி சி.பி. இளங்கோ. அந்த மாலா இப்போது நாகர்கோவிலில் ஆசிரியராகப் பிரகாசிக்கிறார்.

அருமனை ஜான்ரோஸ் தக்கலை அஜீஸ் தையல்காரர் தாசன் இப்படி எந்த மதத்தாராக இருந்தாலும் எந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பாகுபாடு கருதாமல் சகோதர உறவோடு பழகி வாழ்ந்த அவரது பாங்கு சான்றாளருக்கான மாண்பு. நான் அக்குடும்பத்தில் மூத்த மகன். எனது துணைவியார் ப. அய்யம்மாள் குடும்பத்தில் மூத்த மருமகள், எனது மகன்கள் லெனின் ஸ்டாலின் பேரன்கள், லெனின் மகன்கள் வாசன் நேசன் அக்குடும்பக் கொள்ளுப் பேரன்கள். மதுரை ஆதீனம் அருணகிரி சுவாமிகள் அவருக்குச் சொந்தம். மதுரை மேலூர் கொட்டகுடி நிருபர் சீனிவாசன் அவருக்குச் சொந்தம். தியாகி சி.பி. இளங்கோ மார்க்சியக் காங்கிரஸ்காரர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல். இது மார்க்சியத்திற்கு முந்திய முன்னோடியான சித்தாந்தம். இந்தச் சித்தாந்தம் தோன்றிய நாடு-இந்தியா. மாநிலம் - தமிழ்நாடு. இந்தக் கருத்து சோவியத் நாட்டில் சொல்லப்பட்டது. காது கொடுத்து இக்கருத்தைக் கருத்தாகக் கேட்டவர் தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி. தமிழர் சித்தாந்தத்தின் மொத்த உருவம் தியாகி சி.பி. இளங்கோ.

சாதாரணக் குடும்பத்தில் சி.பி. இளங்கோ பிறந்தார். கம்யூனிஸ்ட் என்றால் சாதாரணமானவன் என்று பொருள். Communis லத்தீன் சொல். இதிலிருந்து தோன்றிய சொல் சாதாரணமாகவே தியாகி சி.பி. இளங்கோ வாழ்ந்தார். சாதாரண மக்கள் வாழ்ந்து உயர அவர் பாடுபட்டு புகழால் உயர்ந்தார்-தோழர் ஜீவானந்தம் மாதிரி; தோழர் நல்லகண்ணு மாதிரி.

***தியாகி சி.பி. இளங்கோ உடலால் மறைந்தார். உயர்ந்த தியாகத் தொண்டால் அவர் நம்மோடு உயிராகத் திகழ்கிறார்.***

## ஆலய நுழைவுப் போராட்டம்

**குருவாயூர்**

1931-ல் குருவாயூர் ஆலய நுழைவுப் போராட்டம் தொடங்கியது. மன்னத்து பத்மநாபன், குஞ்சு கிருஷ்ணன், ருக்குமணி அம்மாள், குட்டன் நாயர், குரூர் நம்பூதிரிபாட், புதுச்சேரி குல்தாப்பு, கேளப்பன், ஏ.கே. கோபாலன், கிருஷ்ண பிள்ளை ஆகியோர் பங்கேற்றவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

1931, 21 அக்டோபர் கண்ணூர் சுப்பிரமணியன் தலைமையில் குருவாயூரை நோக்கி ஆலய நுழைவுப் போராட்டக்காரர்களின் ஊர்வலம் தொடங்கியது. நவம்பர் ஒன்றாம் தேதி சத்யாகிரகம் தொடங்கியது. சி.பி. இளங்கோ அந்தப் போராட்டத்தில் தீவிரமாக செயல்பட்டார். அங்குள்ள மக்கள் அவரை 'சகா' என்று அன்போடு அழைத்தனர். கோவிலின் மணியை சி.பி. இளங்கோ போராட்டத்தின் போது அடித்ததன் விளைவாக தீட்டு ஏற்பட்டதாக குருவாயூர் கோயில் பிராமணர்கள் இளங்கோவைத் தாக்கினர்.

**சுசீந்திரம்**

டாக்டர். எம்.இ. நாயுடு தலைமையிலான சுசீந்திரம் சத்தியாகிரகத்திலும் சி.பி. இளங்கோ பங்கேற்றார். விளைவாக இடலாக்குடி லாக்கப்பில் சிறைபிடிக்கப்பட்டார். இங்குதான் முதன் முதலில் அவர் ஜீவாவை சந்தித்தார். அந்த சிறை தன்னபிறை என்று அழைக்கப்பட்டது.

# காணி குடியிருப்பில் சி.பி. இளங்கோ

முனைவர். **இரா. சுரேஷ் சுவாமியார் காணி**
நிறுவனத் தலைவர் - பழங்குடி பாரதம்

**வெள்ளைத் தாடி**
**வெள்ளைத் தேகம்**
**வெள்ளை வேட்டி**
**வெள்ளைச் சட்டை**
**வெள்ளை மனம்**

இந்த வெண்ணிற மனிதனை நான் வெள்ளாம்பி மலைக் காணிக்குடியிருப்பில் 1983-ல் ஒரு செப்டம்பர் திங்களில் ஆதவன் மறையும் ஒரு மாலைப் பொழுதில் சந்தித்தேன். அப்போது எனக்கு வயது பதினொன்று. 1980-களில் குமரி மாவட்டத்தின் காணிக்குடியிருப்புகளில் அறியாமை இருள் பரவிக் கிடந்த காலம். இம்மக்களுக்கு கல்வியும் கலாச்சாரமும் பொருளாதாரமும் முழுமையாக வந்தடையாத காலம். காணி மக்களின் இயலாமையைப் பயன்படுத்தி வெளிநபர்களும், பாட்டக்காரனும், குத்தகைக் காரனும் ஏமாற்றி வஞ்சித்து இவர்களின் விளை பலன்களை மக்களைச் சூறையாடிய காலம் அது. போதாத குறைக்கு வனத்துறையும் காவல் துறையும் இந்த பழங்குடி மக்கள் மீது பொய் வழக்குகள் புனைந்து சிறை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். இந்த அப்பாவி மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்ப எவருமில்லாத காலத்தில் எனது தகப்பனாரும், தியாகி சி.பி. இளங்கோ அவர்களின் மூத்த புதல்வர் திரு. இ. சந்திரமோகனும் மற்றும் சில காணி இன இளைஞர்களும் இணைந்து வெள்ளாம்பி மலை காணிக் குடியிருப்பில் **ஆதிவாசிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம்** என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அந்த சங்கத்தின் துவக்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக நமது தியாகி சி.பி. இளங்கோ அவர்கள் வந்திருந்தார். தந்தை பெரியாரை நேரில் பார்த்தது போன்ற ஒரு பிரமை எனக்கு. மின்விளக்கோ, ஒலிபெருக்கி அமைப்புகளோ இல்லாத அந்த துவக்க விழா மேடையில் இடி முழக்கம்போல முழங்கினார் சி.பி. இளங்கோ அவர்கள்.

**இந்த காடும் மலையும் உங்கள் சொத்து**
**வனம் உங்கள் பிறப்புரிமை**
**காணி மக்களாகிய நீங்கள் தான்**
**கானகத்தின் காவலர்கள்**
**இயற்கை ஈன்றெடுத்த கானகக் குழந்தைகள் தான்**
**காணி இன மக்கள் உங்களைப் பாதுகாப்பதும் உங்கள்**
**உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும்**
**எங்களைப் போன்ற சமூக ஆர்வலர்களின்**
**கடமை எனவே**

**உயிர் உள்ள வரை உங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுப்பேன் உங்கள் போராட்டங்களில் துணை நிற்பேன்** என்று அவர் ஆற்றிய உரை கேட்டு ஆனந்தப்பட்டு கை தட்டியதில் நானும் ஒருவன்.

அன்று நடந்த கூட்டத்தின் நடுவே ஒவ்வொரு பேச்சாளரும் பேசி முடிந்த உடன் நிகழ்ச்சியின் இடையே சமூக விழிப்புணர்வு பாடல்களை எனது **தந்தை இரா. இராஜையா** அவர்கள் பாடினார். **எட்டாமடை இந்திரஜித்** ஆர்மோனியம் வாசித்தார், நான் தபலா வாசித்தேன். நிகழ்ச்சி முடிந்ததும் **யார் இந்த பொடியன் ரொம்ப நல்லா தபலா வாசிக்கிறானே.....**

என்று என்னை விசாரித்தார். பிறகு என்னை அழைத்து அருகில் நிறுத்தி என் தலையைத் தடவியவாறு **நல்லா படிக்கணும், உன்னோட சமுதாயத்திற்காக உரிமைக்குரல் எழுப்புகிற நல்ல தலைவனாக வரவேணும்** என்று வாழ்த்தினார். அன்னாரின் வாழ்த்துதல் பலித்தது.

நானும் நன்றாகப் படித்து காணி இனப் பழங்குடி மக்கள் மத்தியில் முதல் முதுகலைப் பட்டதாரியாகவும், முனைவர் பட்டதாரியாகவும் உயர்வு பெற்றேன். இன்று பாரதத் திருநாட்டின் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களின் உரிமைப் பாதுகாப்பிற்காக குரல் எழுப்பி வரும் **பழங்குடி பாரதம்** என்ற அமைப்பின் நிறுவனத் தலைவராக தொண்டாற்றி வருகிறேன். இந்த இயக்கத்தின் நிர்வாக ஆலோசகராக தியாகி சி.பி. இளங்கோ அவர்களின் புதல்வர். திரு. இ. சந்திரமோகன் அவர்கள் செயல்பட்டு வருவது எமக்கு பெருமை.

எனது பள்ளிப் பருவத்தில் சி.பி. இளங்கோ அவர்கள் நல்கிய வாழ்த்துதல் என்னை சமூக அக்கறை உள்ளவனாக்கியதோடு சமூகப் போராளியாகவும் மாற்றியதை எண்ணி நான் அக மகிழ்வதுண்டு.

1980 களில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வனக் குற்றம் புரிவோர் குமரி மாவட்டத்தின் காடுகளில் வந்து சந்தனம், கடம்பு, ஈட்டி, தேக்கு போன்ற உயரிய மரங்களை வெட்டிக் கடத்துவதோடு, மான், பன்றி, யானை, புலி கரடிகளையும் வேட்டையாடிச் சென்றார்கள் இதனால் வனத்துறைக்கு நெருக்கடி ஏற்பட்டது. திருடர்களைப் பிடிக்க இயலாமல் திண்டாடினார். சமாளிக்க இயலாத வனத்துறை தன் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு மரங்களைத் திருடிய திருடர்களை விட்டு விட்டு காடுகளின் காவலர்களான அப்பாவி காணி இனப் பழங்குடி மக்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டு, கைது செய்து, அடித்து உதைத்து சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தியது.

வனத்துறையின் இந்த அராஜகப் போக்கைக் கண்டித்து தியாகி அவர்கள் தலைமையில் 1984-ல் அழகியபாண்டியபுரம் வனச்சரக அலுவலகத்திற்கு முன்னரும், நாகர்கோவில் வடசேரி மாவட்ட வன அலுவலகம் முன்னரும் மாபெரும் கண்டன ஆர்பாட்டங்களை **ஆதிவாசிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம்** நடத்தியது. இந்தப் போராட்டங்களில் குமரி மாவட்டத்தின் அனைத்து காணிக் குடியிருப்புகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான பழங்குடி மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தியாகி பேசும் போதும் மனிதகுலத்தின் முதல் குடிமக்களான பழங்குடி மக்களைப் பாதுகாக்க வேண்டிய வனத்துறையும் மாநில அரசும் இந்த அப்பாவி மக்கள் மீது அதிகார துஷ்பிரயோகம் செய்வது மிகவும் கண்டனத்துக்குரியது.

காடுகளையும் மலைகளையும் காணி மக்கள் தான் பாதுகாக்க முடியும். இயற்கையின் காவலர்களான இப் பழங்குடி மக்கள் மீது பொய் வழக்குகள் புனைவதை வனத்துறை கைவிட வேண்டும் இல்லையேல் போராட்டம் தொடரும் என்றார் சி.பி. இளங்கோ.

காட்சிக்கு எளியவராயிருந்தாலும் கருத்துச் செறிவு மிக்க தனது உரை வீச்சினால் மக்களைச் கவர்ந்து இழுக்கும் தன்மை கொண்டவர். அவரது எழுத்துக்கள் ஈட்டி முனையைவிடக் கூர்மையானவைகள். காணிக் கிராமங்களில் இரவு நேரங்களில் எரியும் தீப்பந்தங்களின் ஒளி வெளிச்சத்தில் சி.பி. இளங்கோ ஆற்றிய எழுச்சி உரைகள் சிறப்பு வாய்ந்தவைகள். தள்ளாத வயதிலும் தளராமல் நடந்து மலைஏறி மலைவாழ் மக்களின் வாழ்வுரிமை காக்க போராடிய சமூகப் போராளி சி.பி. இளங்கோ.

மார்க்சியத்தின் மகத்துவம்
மங்காத மனித நேயம்
மாசற்ற கொள்கையால்
மக்கள் தலைவன்

சிறமடம் பிரம்ம நாயகம் தந்த
சீர்திருத்தப் புது யுகம்
சிவப்புச் சிந்தனையின்
சித்திர வடிவம் சி.பி. இளங்கோ

இயற்பெயர் கிருஷ்ணன்
இவரது இனிய தோழர் ஜீவா
இவருக்கு இட்ட பெயர் இளங்கோ
இருக்கட்டும் என்று ஏற்றுக் கொண்டனர்

கரும வீரர் காமராசர்
செக்கிழுத்தசெம்மல் வ.உ.சி
தோழர்கள் ஏ.கே.ஜி, இ.எம்.எஸ்,
எச்.வி. காட்டே, ஆகியோரோடு
சுதந்திரப் போரில் சிறை சென்றவர்

தந்தை பெரியார் வைக்கம் வீதியில்
போராடிய போது
தோழர் ஜீவா அவர்களுடன் நேரடியாக
பங்கெடுத்தவர் அன்னார்
காரைக்குடியில் சிராவயல் காந்தி
ஆசிரமத்தில்
சீடத்துவம் பூண்டு சீரிய
தொண்டாற்றினார்.

நாகர்கோவில் நகரசபைத் தேர்தலில்
கம்யூனிஸ்ட் கவுன்சிலராக வெற்றிக் கொடி
நாட்டியவர்
வடிவீஸ்வரம் குறுந் தெருவில் பூங்கா
அமைத்த புண்ணியாளன்

சாமி வலம் வரும் சுசீந்திரம் தேரில்
சுதந்திரக் கொடியை ஏற்றி பறக்க விட்டவர்
பறக்கை தெப்ப குளம் நந்தவனம் இவர்
தந்தது
இதனால் அவருக்கு புகழ் நின்றது.

இன்று அன்னார் வாழ்ந்திருந்தால்
அகவை நூறு - அவர்
இல்லை இன்று - என்றாலும்
புகழ் வாழும் பல நூறாண்டு

## காங்கிரஸ் சோஷலிஸ்ட் பார்ட்டி

*இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சோஷலிய சிந்தாந்த கொள்கைகளை கொண்டிருந்தவர்களால் காங்கிரஸ் சோஷலிஸ்ட் பார்ட்டி உருவாக்கப் பட்டது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அதன் தலைவரானார். அக்கட்சியின் முதல் மாநாடு சேலத்தில் நடைபெற்றது.*

*தமிழ்நாடு சோஷலிஸ்ட் காங்கிரஸ் பார்டியின் உருவாக்கத்தில் ஜீவா, சி.பி. இளங்கோ, பி. சீனிவாச ராவ் ஆகியோரின் பங்கு முக்கியமானது. அன்றைய காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமாக கருதப்பட்டதால் கம்யூனிஸ்ட் கொள்கையோடு இந்த புதிய கட்சி உதயமானது. காங்கிரஸ் சோஷலிஸ்ட் பார்ட்டியானது மார்க்சிய கொள்கைகளுக்கான தளமாக வனுவாக செயல்பட்டது.*

*ஜீவா இதன் பொதுச்செயலாளராகவும் சி.பி. இளங்கோவும், பி. சீனிவாச ராவும் துணை பொதுச் செயாளர்களாகவும் செயல்பட்டனர். பிராட்வே யூனியன் அனுவகைம் கட்சியின் தலைமை அனுவகைமாக செயல்பட்டது.*

## யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம்

*இரண்டாம் உகை மாகயுத்தம் ஐரோப்பாவில் 1939-ல் அறிவிக்கப்பட்டபோது அது இந்திய அரசியலிலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. விலைவாசி, பஞ்சம், பற்றாக்குறை, போன்றவற்றால் மக்கள் கடும் துன்பத்துக்கு ஆளானார்கள். யுத்தம் தொடங்கியபோது காங்கிரஸ் சோஷலிஸ்ட் பார்ட்டியின் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் சென்னை வந்தார். யுத்தத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டினார். சி.பி. இளங்கோ, ஜீவா, பி. சீனிவாசராவ், பி. ராமமூர்த்தி, மதுரை ராமனாதன் ஆகியோர் சென்னை மாகாணம் முழுக்க யுத்த எதிர்ப்பு பிரச்சாரம் மேற்கொள்ள திரளான உறுப்பினர்களைத் திரட்டினர்.*

*யுத்த எதிர்ப்புக் கூட்டங்கள் ஏராளமானவற்றில் சி.பி. இளங்கோ முழங்கினார். இந்திய இராணுவ பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராகவும் யுத்தத்திற்கு எதிராகவும் அவரது உரை வீச்சு அமைந்தது. சென்னை, மதுரை, திண்டுக்கல், கும்பகோணம், தஞ்சாவூர் என அனல் பறக்க யுத்த எதிர்ப்பு உரைகளை அவர் ஆற்றினார்.*

# சட்டை போட மறுத்தவருக்கு சட்டை போட வைத்த தியாகி. சி.பி. இளங்கோ

கருங்கல் **R. ஜார்ஜ்**


தியாகி சி.பி. இளங்கோ எவ்வளவோ உயர்ந்த சிந்தனை உடையவர். அவர் ஓர் உயர் வகுப்பில் பிறந்தவர் என்றாலும் அவருடைய சிந்தனை எப்போதும் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியே இருக்கும். அவருடன் பழகிய சமகால நண்பர்களான கொடிக்கால் செல்லப்பா என்ற கொடிக்கால் ஷேக்அப்துல்லா போன்ற பெரியவர்கள் தியாகி சி.பி. இளங்கோ பற்றிக் கூற கேட்டுள்ளேன்.

1987 என்று கருதுகின்றேன் நிருபர் சீனி வாசன் என்ற சமூக ஆர்வலர் நாகர்கோவிலில் வசித்து வந்தார். அவருடைய துணைவியார் அரசு மருத்துவமனை கோட்டாறில் செவிலியராக பணி புரிந்தார். நிருபர் சீனிவாசன் சமூகத்தில் எங்கு அநீதி நடந்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுப்பார். மேற்படி வருடத்தில் கோட்டாறில் இருந்த காவல் நிலைய ஆய்வாளர் பற்றி பொதுமக்கள் மத்தியில் கடுமையான கெட்ட பெயர் "லஞ்சம் வாங்கும் அதிகாரி" என்ற பெயர் எடுத்திருந்தார்.

அந்த அதிகாரியைப் பற்றி நிருபர் சீனிவாசன் தனது வழக்கப்படி 15 காசு கார்டில் புகார் எழுதி உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி விட்டார். ஊழல் அதிகாரி நிருபர் சீனிவாசனை ஸ்டேஷனுக்கு கொண்டு வந்து தாக்கி சட்டையையும் கிழித்து அனுப்பி விட்டார்.



விஷயம் கேள்விப்பட்டு தியாகி சி.பி. இளங்கோ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். பின்பு வழக்கறிஞர் R. ராதாகிருஷ்ணன், இ. சந்திரமோகன், கருங்கல் ஜார்ஜ் (நான்) உட்பட ஏராளமானோர் வடிவீஸ்வரம் பூங்கா முன்பு நடத்திய நிருபர் சீனிவாசனுக்கு சட்டை அணிவிக்கும் போராட்டத்தில் தியாகி சி.பி. இளங்கோ தலைமையில் இளைஞராக நானும் கலந்து கொண்டதில் எனக்கும் பெருமையே.



# பெருந்தலைவர் காமராஜ் நேசித்த தியாகி சி.பி. இளங்கோ

**R. இராதாகிருஷ்ணன்** M.A.B.L,
(மாநிலத்தலைவர், தமிழ்நாடு காமராஜர் நற்பணிமன்றம்)

வரலாற்றில் குமரி மாவட்டம் பல்வேறு மண்ணின் மைந்தர்களால் மிகப்பெரிய பெருமை பெற்றுள்ளது. குமரித்தந்தை மார்ஷல் நேசமணி பொதுவுடைமைவாதி ஜீவானந்தம், நகைச்சுவைத் திலகம், N.S. கிருஷ்ணன், கவிமணி, அப்துல்ரசாக் N.A. நூர் முகம்மது, சிதம்பரநாடார், தாணுலிங்கநாடார், பொன்னப்பநாடார், குஞ்சன்நாடார் போன்ற தியாகசீலர்கள் நம் கண் முன் வலம்வருவதுபோல தியாகி சி.பி. இளங்கோவும் நம் கண்முன்னே வலம் வருகின்றார் என்றால் அது மிகையாகாது.

நான் சென்னை சட்டக்கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவுடன் 1986-ம் ஆண்டில் நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் ஆசியோடு குமரி மாவட்ட சிவாஜி மன்றத்தலைவராக நியமிக்கப் பட்டேன். அப்போது குமரி மாவட்டத்தின் பல்வேறு தியாகிகள், தலைவர்களை, பெரியோர்களை நான் சந்தித்து ஆசி பெற்றேன். அப்போது வடிவீஸ்வரம் பகுதியில் வசித்த தியாகி சி.பி. இளங்கோவை நான் சந்தித்து ஆசிபெற்ற நிகழ்வு என்னால் மறக்க இயலாதது.

நல்வெண்மையும், சிவப்பும் கலந்த நிறக்கலவையின் அடையாளம் தியாகி சி.பி. இளங்கோ. முடிகள் வெண்மையாய் நிறமாறிய, உடல் தளர்ச்சியான நிலையில் சி.பி. இளங்கோவை நான் கண்டேன். தான் வசித்த வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்திருந்த தியாகி சி.பி. இளங்கோவிடம் நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். புன்சிரிப்போடு என்னை கைகுலுக்கி வரவேற்றார். ஒரு



வழக்கறிஞர், இளைஞர், சிவாஜி மன்றத்திற்கு மாவட்டத் தலைவராக கிடைத்துள்ளது மகிழ்ச்சியான விஷயம், தம்பி இளைஞனான நீ மக்களுக்காக வேகமாக பணிபுரிந்து வெற்றி பெறவேண்டும் என்று என்னைப் பார்த்து தியாகி சி.பி. இளங்கோ வாழ்த்தியது இன்றும் என் இதயவானில் எதிரொலிக்கிறது.

சி.பி. இளங்கோ என்னைப் பற்றியும் என் குடும்பத்தை பற்றியும் விசாரித்தார் நான் ராமன்புதூர் சற்குணவீதியில் R.R.N. குடும்பத்தைச் சார்ந்தவர் என்று அறிமுகப்படுத்தினேன். உடனே பெருந்தலைவர் காமராஜர் இடைத்தேர்தலில் குமரிமாவட்டத்தில் போட்டியிட்ட பொழுது காமராஜரின் வெற்றிக்காக உழைத்த குடும்பம்தான் உங்கள் குடும்பம். காமராஜரின் தேர்தல் வெற்றிக்கு உழைத்ததால் கிட்டு கொலை வழக்கில் உங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் வேண்டுமென்றே சேர்க்கப்பட்டதால், உங்கள் குடும்பம் மிகவும் சிரமப்பட்ட விபரங்கள் எனக்கு தெரியும் என்று என்னிடம் சொன்னார். நான் உடனே தியாகி சி.பி. இளங்கோ அவர்களிடம் எனது பெரியப்பா R. இராமலிங்கம் அவர்களை (எனது அப்பாவின் சொந்த சகோதரர்) மேற்படி கொலை வழக்கில் பொய்யாகச் சேர்த்து மிகவும் கஷ்டப்பட்ட விபரத்தை அவரோடு நான் பகிர்ந்து கொண்டேன்.

தேசிய பாரம்பரியத்தை சார்ந்த உன்னுடைய பணி ஏழை மக்களுக்காகவும், பாதிக்கப்பட்ட

மக்களுக்காகவும் செயல்படுகின்ற வகையில் அமைய வேண்டும் என்றுகூறி என்னை ஆசீர்வதித்து சி.பி. இளங்கோ அவர்கள் அனுப்பி வைத்தார்.

தியாகி சி.பி. இளங்கோ அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஆற்றிய பணி மகத்தானது. தொழிலாளர்கள் எல்லா உரிமையும் பெற்று வளமான வாழ்வு காணவேண்டும் என்ற சி.பி. இளங்கோவின் நினைவுகள் என்றும் பாராட்டத்தகுந்தது.

தியாகி சி.பி. இளங்கோவும் தொழிலாளர் தலைவர் ஜீவா அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்டு ஒரே சிறையில் அடைக்கப்பட்டது நினைவுகூரத் தகுந்தது.

பெருந்தலைவர் காமராஜர் சி.பி. இளங்கோ அவர்கள் மீது மிகவும் பாசமும் மதிப்பும் கொண்டிருந்தார். இதனை பேராசிரியர் R. ஐசக் ஜெயதாஸ் என்பவரின் "காமராஜரும் கன்னியாகுமரி மாவட்டமும்" நூல் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அந்நூலில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"காமராஜர் நாகர்கோவில் தொகுதி எம்.பி. ஆக தெரிந்தெடுக்கப்பட்டவுடன் தனது தொகுதியை மறக்காமல் மாதத்திற்கு ஒருமுறை சுற்றிப்பார்க்கும் பழக்கம் இருந்தது. தமிழகத்திலும், இந்தியாவிலும் தனக்கு இருந்த கட்சிப் பணிகளுக்கிடையே மாதத்திற்கு ஒரு முறை தவறாமல் வந்து கன்னியாகுமரி சுற்றுலா பயணிகள் விடுதியில் தங்கி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வந்தார். மக்கள் தொடர்பை வலுவாக வைத்துக் கொண்டதில் காமராஜருக்கு நிகர் அவரேயாவார். சுற்றுப் பயணத்தின் போது கிராமம் கிராமமாக எல்லா கிராமங்களுக்கும் சென்று குறைகளைக் கேட்டறிந்து அதனைத் தன்னால் முடிந்த நிலையில் நிறைவேற்றுவது அவர் வழக்கம். இதனால் நாகர்கோவில் நாடாளுமன்ற தொகுதி மக்களுக்கும் காமராஜருக்கும் இடையில் இருந்த பாசப்பிணைப்பு சிறப்பாக அமைந்திருந்தது. மக்கள் குறையினை எவ்வாறாயினும் தீர்த்து வைக்க வேண்டுமென்ற தாகம், தனது கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் ஆகியவை அவரது இரத்தத்தில் ஊறியிருந்த சிறப்பம்சங்களாகும். தொகுதி சுற்றுப்பயணத்தின்போது தனக்கு சற்று பழக்கமானவர்களை மறக்காமல் பெயர் சொல்லி அழைப்பது நலம் விசாரிப்பது காமராஜரின் சிறந்த பழக்கமாயிருந்தது.

1972-ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தின்போது ஒருமுறை காமராஜர் நாகர்கோவில் கோட்டாறு பகுதியில் டாக்டர் ME நாயுடு ஆஸ்பத்திரியின் அருகே வரும்பொழுது பக்கத்திலுள்ள தெருவில் சுதந்திரப்போராட்ட தியாகி C.P. இளங்கோ அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். சாலையில் காரில் சென்று கொண்டிருந்த காமராஜர் அவரைப் பார்த்தவுடன் காரை நிறுத்தச் சொன்னார். நடந்து சென்ற இளங்கோவை அழைத்துவரக் கூறினார். இளங்கோ வந்ததும் காமராஜர் காரிலிருந்து இறங்கி என்ன இளங்கோ? குடும்பம் எல்லாம் நன்றாக இருக்கிறதா? எனக் கேட்டுவிட்டு, "நான் புறப்படுகிறேன். கன்னியாகுமரியில் தங்கியிருக்கிறேன் வந்து பார்" என்று சொல்லிவிட்டு காரில் புறப்பட்டுச் சென்றார் காமராஜர். காமராஜரிடம் உங்களுக்கு எவ்வாறு இவ்வளவு நெருக்கம் என இளங்கோவிடம் விசாரித்த போது, சுதந்திரப் போராட்ட காலத்தில் காமராஜர், ஜீவா ஆகியோருடன் ஒன்றாக சிறைச்சாலையில் இருந்ததில் ஏற்பட்ட நெருக்கம் எனக் கூறினார். ஆக காமராஜர் தன்னோடு பழகியவர்களிடத்திலும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளிடத்திலும் எவ்வளவு மதிப்பு வைத்துள்ளார் என்பது இந்நிகழ்வின் மூலம் தெளிவாகியது."


C.P. இளங்கோ அவர்கள்மீது பெருந்தலைவர் காமராஜர் வைத்திருந்த அளவற்ற அன்பையும், மரியாதையையும் பற்றி பேராசிரியர் R. ஐசக் ஜெயதாஸ் அவர்கள் பதிவு செய்துள்ள தகவல் C.P. இளங்கோ என்ற மாமனிதரின் பண்பு நலன்களை நமக்கு தெள்ளத் தெளிவாக விளக்குகிறது.

நான் 'அன்பர் கழகம்' என்ற அமைப்பின் சட்ட ஆலோசகராகவும் செயல்பட்டு வருகிறேன். மேற்படி அன்பர் கழகத்தினுடைய மாநில அமைப்பாளராக கவிஞர் சூசை அமலதாஸ் செயல்பட்டு வருகிறார். அன்பர் கழகம் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தின் முன்னால் நடைபெற்ற ஒரு ஆர்ப்பாட்ட போராட்டத்தில் நானும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினேன். தியாகி C.P. இளங்கோவும் கலந்துகொண்டார். அந்த முதிய வயதிலும் C.P. இளங்கோ அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை போராட்டத்தில் கலந்து கொண்டவர்களைத் தட்டி எழுப்புகிற வகையில் ஒரு வீர கர்ஜனையாக எழுச்சிமிகு உரை அமைந்திருந்தது. ஆயிரம் இளைஞர்களுக்கு மேலான ஒரு சக்தியை C.P. இளங்கோவின் வீர உரை உணர்த்தியது. தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் நாம் ஆதரவாகப் போராடும்போது தோழர் ஜீவானந்தம் போல் இரும்பு மனிதராக மாறி நாம் பணி செய்ய வேண்டும் என வாழ்த்துரை கூறி C.P. இளங்கோ பேச்சை முடித்துக் கொண்டார். அந்த பசுமையான காட்சி, C.P. இளங்கோவின் தீவிரமான பேச்சு இன்றும் என் மனதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு காமராஜர் நற்பணி மன்ற சார்பில் பல்வேறு மக்கள் பிரச்சனைகளுக்கு போராடி வெற்றி கண்ட பொழுது C.P. இளங்கோ என் கட்சியின் வழிகாட்டியாக என்னோடு நின்று செயல்பட்டது போன்ற பிரம்மையை நான் அடிக்கடி உணர்ந்துள்ளேன்.

பொன்னாசை, பொருளாசை, பேராசை, மண்ணாசை என்று எதையும் நாடாத குணம் கொண்ட C.P. இளங்கோ பெருந்தலைவர் காமராஜரை மட்டுமல்ல எல்லோரையும் கவர்கின்ற ஒரு தலைவராக திகழ்ந்தார் என்பது மறக்க முடியாத உண்மை. தியாகி C.P. இளங்கோ அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற வேளையில் தொழிலாளர்கள் வாழ்வு மலர, பொதுமக்கள் எல்லா உரிமையும் பெற ஜனநாயகமும், சமூக நீதியும், காக்கப்பட உழைப்போம் என உறுதிமொழி ஏற்போம்.

**தீக்கதிர் செய்தி**

## கம்யூனிஸ்ட் தலைவர் இளங்கோ காலமானார்



நாகர்கோவில் ஆக. 3, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தமிழ்நாட்டில் துவக்கிய முக்கிய தலைவர்களில் ஒருவரும், சுதந்திரப் போராட்டத் தியாகியுமான சி.பி. இளங்கோ 30-ம் தேதி இரவு காலமானார். இவரது மறைவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்டக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் சி.பி.இளங்கோ 1915-ல் பிறந்தார். 1933-ல் இருந்து தொழிலாளர் வர்க்க இயக்கங்களில் ஈடுபடத் துவங்கினார். 1935-ல் ஆங்கிலேயர்க்கு எதிரான இயக்கங்களில் ஈடுபட்டதால் குண்டூரில் கைது செய்யப்பட்டு. ராஜமுந்திரி சிறையிலடைக்கப்பட்டார். 1943-ல் மீண்டும் கைது செய்யப்பட்டு திருவிதாங்கூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இவர் தோழர்கள் பி. ராமமூர்த்தி ப. ஜீவானந்தம் ஆகியோருடன் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியைத் தமிழகத்தில் உருவாக்கியவர்களில் ஒருவர். இவரது மறைவை அறிந்து, மாநில செயற்குழு உறுப்பினர் பி. சம்பத், மாவட்டச் செயலர் எஸ். நூர்முகமது, மாநிலக்குழு உறுப்பினர் ஜே. ஹேமச்சந்திரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் டி. மணி எம்.எல்.ஏ, பி. திவாகரன், பி. பெருமாள், என். முருகேசன், என். ராமச்சந்திரன் ஆகியோர் அவரது இல்லம் சென்று இறுதி மரியாதை நிகழ்த்தினர்.

# நாட்டிற்கு உழைத்த இளங்கோ

தியாகி கோ. முத்துக்கருப்பன், எம்.ஏ.,
துணைத்தலைவர், தெற்கெல்லைப் போராட்ட வீரர்கள் சங்கம்

நாட்டிற்காக உழைத்த பல பெரியோர்களை நாடும் மறந்து, மக்களும் மறந்து வருகின்ற வேளையில் நாட்டிற்காக உழைத்து குடும்பத்தையும் பார்க்க நேரம் இல்லாமல் தாலிகட்டிய துணைவியையும் கவனிக்காமல், பெற்ற பிள்ளைகளையும் நேரடியாக கவனித்து வளர்க்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுதும், சுதந்திர வேட்கையால் உந்தப்பட்டு இந்திய சுதந்திரப் போராட்ட வீரராகவும் திருத் தமிழக இணைப்புப் போராட்ட வீரராகவும் திகழ்ந்த தியாகி சி.பி. இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா எடுப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவில் சிறமடம் என்னும் சிற்றூரில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்களில் ஒருவராகிய பிரம்மநாயகம் பிள்ளையின் மகனாகிய கிருஷ்ணனுக்கு தொழிலாளர் தோழர் ஜீவா அவர்கள் சூட்டிய பெயர் தான் இளங்கோ என்பது, எப்படி சொரிமுத்து என்ற பெயர் ஜீவா ஆனது போன்றுதான் கிருஷ்ணன் என்றப் பெயர் மங்கி இளங்கோ என்ற பெயர் புகழடைந்தது.

இளங்கோ அவர்கள் சிறுவயது முதலே ஜீவாவின் நிழலாகவே இருந்து சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்கள். ஜீவாவைப் போன்றே பெருந்தலைவர் காமராஜரோடும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை புகுந்துள்ளார். பெருந்தலைவர் காமராஜர் இளங்கோவிடம் எவ்வளவு அன்புடையார் என்பதை நேரில் கண்டேன்.



ஒரு சமயம் பெருந்தலைவர் காமராஜர் நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது கன்னியாகுமரி மாவட்ட சுற்றுப்பயணத்திற்காக கன்னியாகுமரியில் இருந்து காரில் புறப்பட்டு வந்தார் அந்த சமயம் நான் குமரிமாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்த பொழுது பெரியவரின் காரின் முன்னால் வழிகாட்டியாக சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது கார் கோட்டாறு இடலாக்குடியில் டாக்டர் எம்.இ. நாயுடு ஆஸ்பத்திரி அருகில் உள்ள சௌராஷ்டிரா தெருவின் முன் வருகின்ற பொழுது முன்னே வழிகாட்டியாகச் சென்ற என்னை காரை நிறுத்தச் சொன்னார். நான் காரை நிறுத்தி அவசரமாக இறங்கி பெரியவர் கார் முன்பு சென்று பெரியவரைப் பார்த்தேன். அவர் உடனே சௌராஷ்டிரா தெருவின் நடுவில் நடந்து வருகின்ற இளங்கோ அவர்களைப் பார்த்து விட்டு என்னிடம் அதோ வந்து கொண்டிருப்பது இளங்கோ தானே? அவரை நான் பார்க்க வேண்டுமென்று கூறி அழைத்து வா? என்றார் அதற்கிடையில் இளங்கோ அவர்களும் அருகில் வந்துவிட்டார். காரில் இருந்த பெரியவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்த உடன் பெரியவரும் வணக்கம் தெரிவித்து இளங்கோ அவர்களை அருகில் அழைத்து உடல் நலம் குடும்ப நலம் எல்லாம் அக்கறையோடு விசாரித்து விட்டு நான் மக்களை சந்தித்துச் செல்கிறேன். கன்னியாகுமரி சுற்றுலாமாளிகையில் தங்கி இருக்கிறேன். சமயம் இருந்தால் வந்து பாருங்கள்

என்று வாஞ்சையுடன் கூறி புறப்பட்டது இன்றும் என் கண்முன்னே நிழலாடுகின்றன. பெருந்தலைவர் தன்னுடன் போராட்டக் காலத்தில் கலந்து கொண்டவர்களை மறக்காமல் இன்னும் நினைவுப்படுத்திக் கொள்கிறார்களே என்று எண்ணிப் பார்த்துக் கொண்டேன்.

இளங்கோ அவர்கள் இளைஞராக இருந்த பொழுது அவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபோது ஒரு சமயத்தில் 1946-ம் ஆண்டில் பம்பாயில் ஒரு கருத்தரங்கு கூட்டத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி திருவிதாங்கூர் தலைவர் ஸ்ரீகண்டன் நாயர் என்பவர் பேசியபோது திருவிதாங்கூரில் தமிழர்கள் மைக்ரோஸ்கோப்பிக் மைனாரட்டியினர் என்றார். அந்த கூட்டத்தில் திடீரென ஒரு இளைஞர் எழுந்து திரு. நாயர் பேசுவது தவறு, நான்கில் ஒரு பங்கினர் என்று துணிச்சலுடன் உண்மையை எடுத்துக் கூறினார். அந்த இளைஞர்தான் அன்று போராட்டத்திற்காக தலைமறைவாக திரிந்து வாழ்ந்த சி.பி. இளங்கோ ஆவார். பின்பு அவர் திருத் தமிழகப் போராட்டத்தில் ஆற்றிய செயல்பாடுகளை நினைக்கின்ற பொழுது பிரமிக்க வைக்கின்றது.

திருத் தமிழரியக்கப் போராட்டங்கள் நடந்த பொழுது போராட்டங்களிலும் கலந்து கொள்வதோடு திருத் தமிழரியக்கப் போராட்டத்தின் போது தினமலர் நாளிதழ் போராட்டச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு திருத் தமிழரியக்கப் போராட்டத்திற்கு புத்துணர்ச்சியும் கொடுத்தனர். அந்த சமயங்களில் இளங்கோ அவர்கள் தினமலர் நாளிதழின் நிருபராக இருக்கவே போராட்டம் புத்துணர்ச்சியுடன் நடைபெறுவதற்கு சுறுசுறுப்பான செய்திகளை கொடுத்துப் போராட்ட வீரர்களை ஊக்கப்படுத்தியதை நினைவுகூர்ந்து பார்க்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்து செயல்பட்டபொழுது, வேதனையுற்று இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இணைப்பது என்ற குறிக்கோளுடன் சி.பி. இளங்கோ அவர்கள் தன்னோடு இன்னும் இரண்டு திருத் தமிழக தியாகிகளான ஆர்.கே. ராம், குழந்தைசாமி ஆகியோரை இணைத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் 'சங்கமம்' என்ற பத்திரிகையை தொடங்கி செயல்பட்டார். ஆனால் அவர் முயற்சி செய்த பலன் இதுவரையிலும் கிட்டவில்லை.

12-12-1992-ல் நாகர்கோவில் ஏ.எஸ். தங்கவேல் திருமணமண்டபத்தில் நடைபெற்ற தொழிற்சங்கத் தலைவர் கே.எல்.எஸ் சந்தானம் அவர்களின் மணிவிழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்ததை எண்ணிப் பார்க்கிறேன்.

கன்னியாகுமரியில் இருந்து சாகித்திய அகடாமி பரிசு பெற்றிருக்கின்ற எழுத்தாளர் பொன்னீலன் தலைமையில் இந்தோ சோவியத் கலாச்சார கழகம் நடத்திய சமாதான பாதயாத்திரையில் அவர் இளைஞரைப் போல் கலந்து கொண்டு செயலாற்றிய விதம் பிரமிக்க வைக்கின்றது. காரணம் அவர் இதற்கு முன்பே இந்தோ சோவியத் கழகத்தின் செயலாளராக இருந்து செயல்பட்டுள்ளார். அதன் பேரில் தான் நான் இஸ்கஸ்சின் மாவட்டத் துணைத் தலைவராக இருந்தபொழுது நாகர்கோவில் மணிக்கூண்டு அஞ்சலாபீஸ் அருகில் ரஷ்யாவில் இருந்து வந்த சிறுவர், சிறுமிகளை வரவேற்றுப் பாராட்டுகின்ற பொழுது என்னுடன் இருந்து ஊக்கப்படுத்தியுள்ளார்.

ஆகவே தான் 1985-ல் நாகர்கோவிலில் திருத் தமிழியக்கத்திற்கு பத்திரிகை வழி தொண்டாற்றியவர்களை பாராட்டுகின்ற பொழுது தியாகி சி.பி. இளங்கோ அவர்களை முதன்மைப்படுத்தி பாராட்டினார்கள்.

1997-ல் சுதந்திரப் போராட்ட தியாகிகள் பொன்விழா நடைபெறும் சமயத்திலும் நாகர்கோவிலில் சுதந்திரப் போராட்ட தியாகியான திரு. சி.பி. இளங்கோ அவர்கள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தியாகி சி.பி. இளங்கோ அவர்களின் தியாகத்தை பாராட்டி விழா எடுக்கும் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

# அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும்

ஜீவா மணிக்குமார்

சி.பி. இளங்கோ - சுதந்திர போராட்ட காலத்தில் தமிழகம் முழுவதும், குறிப்பாக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வெள்ளையர் களையும், அவர்களுக்கு பல்லக்கு தூக்கிய சமஸ்தானத்து மன்னர்களையும், கலங்கவைத்த பெயர். அமரர் ப. ஜீவானந்தத்தின் இணை பிரியாத துணைவனாய், தோழனாய், உடன் பிறவாத் தம்பியாய் வலம் வந்தவர். ஜீவாவை பிடிக்க வேண்டுமென்றால், இளங்கோவைப்பிடி என இணைந்து போராடியவர்கள். சுதந்திரம் கிடைக்கப் பெற்றவுடன், சோர்ந்து போகாமல், அரசியல் சுதந்திரம் போதாது, பொருளாதாரச் சுதந்திரம் வேண்டும். "பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை" - என உணர்ந்து பொருளா தாரத்தில் சமத்துவம் பெறவேண்டுமெனில், தொழிலாளார்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். பாட்டாளி ஆட்சி மலரவேண்டும் என்ற உண்மையை உணர்ந்து, உண்மையான பொதுவுடமைவாதியாக தங்களை உருவாக்கிக் கொண்டவர்கள் தோழர் ஜீவாவும், தோழர் சி.பி. இளங்கோ அவர்களும். பொதுவுடமை இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டு பாட்டாளிகளின் ஆட்சி பார்க்கப் பரிதவித்து பாடுபட்டார்கள். தோழர் ஜீவாவின் மறைவிற்குப் பிறகும் மனதளவில் தோழராக வாழ்ந்துவந்த சி.பி. இளங்கோ அவர்கள், தேசியத்தை மறவாமல், தேசிய கொள்கைகளுக்கும் தோள் கொடுத்தவர். இந்திய சோவியத் நட்புறவு வளர வேண்டும் என்ற பேரவவாவில் அதிலும் இணைந்து பாடுபட்டவர். இப்படி அமரர் சி.பி. இளங்கோ அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் புத்தக வடிவில் தான் சொல்ல வேண்டும். இன்றைய இளைஞர்களுக்கு அன்று இளைஞராக இருந்த சி.பி. இளங்கோ அவர்கள் முன் மாதிரியாக இருந்தவர்கள். உண்மை, நேர்மை, உழைப்பு இதற்கு எடுத்துக்காட்டு திரு. சி.பி. இளங்கோ அவர்கள்.



பொதுவாழ்வில் வாழ்ந் தவர்கள் பெண்டு பிள்ளைகளை கவனித்த தில்லை. இதற்கு எனது தந்தை அமரர் ப. ஜீவானந்தம் அவர்களும் எனது சித்தப்பா அமரர் சி.பி. இளங்கோ அவர்களும் மிகச்சரியான உதாரணம், எங்கள் சித்திமார்கள் பட்ட துன்பத்தை எனது தாய் அடிக்கடி கூறுவார்கள். எங்களது குடும்பமாக வாழ்ந்து மறைந்த எனது சித்தப்பா அமரர் சி.பி. இளங்கோவை, குடும்ப வாழ்க்கையில் எனது தந்தையரைப் போல குறை கூறலாம். ஏனெனில் இவர்கள் இருவரும் குடும்பத்தைப்பற்றி கவலை கொள்ளாதவர்கள். 'பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு குடும்ப வாழ்க்கை கூடாது' என அன்றைக்கு உணர்த்தியவர்கள்.

எனது தம்பிகள் அவரவர்கள் தங்களுடைய உழைப்பால் வாழ்ந்து வருபவர்கள். எனது தாய் அடிக்கடி கூறுவார்கள். "மிகச்சிறந்த உண்மையான அரசியல்வாதி பொறுப்பற்ற குடும்பத்தலைவனாக இருப்பார்" "நாட்டை பார்த்தால் வீட்டைப் பார்க்க இயலாது" - வீட்டைப்பார்த்தால் நாட்டை பார்க்க இயலாது" - இதுதான் அன்றைய அரசியல் வாதிகளின், வாழ்க்கை. தியாகத்தைக்கூட தியாகமாகக் கருதாமல் கடமையாகக் கருதிச் செயல்பட்டவர் திரு. சி.பி. இளங்கோ அவர்கள்.

தம்பி இ. இலட்சுமணன், தனது உழைப்பில் உயர்ந்து கல்வி நிறுவனத்தை நிறுவி எதிர்காலத் தலைமுறையைச் சிறப்பாக உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்துள்ளார் என்பதைக் காணும் போது பெருமையாக உள்ளது. எனது சித்தப்பாவின் நூற்றாண்டு தம்பி லட்சுமணனால் கொண்டாடப்படுவதைவிட, அரசுக்கு எடுத்துக்கூறி அரசு விழவாகக் கொண்டாடினால், அரசுக்குப் பெருமை; நாட்டுக்குப் பெருமை, ஏனெனில் நம்முடைய நாட்டிற்கு அவரைப் போன்ற தலைவர்கள், இளைஞர்கள் தேவை. இதை அரசின் செயல்பாட்டினால் உணர்த்தினால் உன்னதமாக இருக்கும். அமரர் ஜீவாவைப் போன்ற அமரர் சி.பி. இளங்கோவைப் போன்ற தலைவர்கள் எதிர்காலத்தில் உருவாக, தமிழகமெங்கும் பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர்களின் போராட்டங்களை புத்தக வடிவிலும், நிகழ்ச்சி வடிவிலும் எடுத்துச் சொல்லுதல் வேண்டும். அந்த வகையில் எனது சித்தப்பா அமரர் சி.பி. இளங்கோ அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா ஒரு தொடக்கமாக இருக்கட்டும். இதற்கு முன் முயற்சி எடுத்த தம்பி திரு. இ. இலெட்சுமணன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

---

# சி.பி. இளங்கோ மறைவு

**ஜனசக்தி 15-08-99**

விடுதலைப் போராட்ட தியாகியும், இந்திய சோவியத் கலாச்சாரக் கழகம் (இஸ்கஸ்) மற்றும் இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் (இஸ்கஃப்) கன்னியாகுமரி மாவட்டத் தலைவராகச் செயலாற்றி வந்தவருமான தோழர் சி.பி. இளங்கோ, தனது முதிய வயதில் (84) கடந்த 30-07-99-ல் நாகர்கோவிலில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டத்தின் போது அமரர் தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் சகாவாக செயல்பட்டவர் இளங்கோ.

1984-ல் இஸ்கஸ் சார்பில் சமாதான பாதயாத்திரை கன்னியாகுமரியிலிருந்தும் பொள்ளாச்சியிலிருந்தும் சென்னைக்கு ஏற்பாடு செய்யப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து உதவினார். நட்புறவுக் கழகத்தின் மாநாடுகள், மாநிலக் கவுன்சில் கூட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டார். அவரது மறைவு நட்புறவு இயக்கத்திற்குப் பேரிழப்பாகும். அவர் மறைவுக்கு "ஜனசக்தி" தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. இஸ்கஃப் மாநிலப் பொதுச் செயலாளர் என்.டி. வானமாலை, இளங்கோ குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துத் தந்தி அனுப்பியுள்ளார்.

1938-ல் கன்னியாகுமரி மாவட்டம் (நாஞ்சில் நாடு) திருவிதாங்கூர் - கொச்சி சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த பொழுது விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டதற்காக தோழர் ஜீவாவும், சி.பி. இளங்கோவும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பொழுது அவர்கள் தமிழ் நாட்டில் பல இடங்களில் சுற்றுப்பயணம் செய்து விடுதலை இயக்கப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

## ஆர். நல்லகண்ணு இரங்கல்

சுதந்திரப் போராட்ட வீரரும் அமரர் ஜீவாவுடன் தமிழ் நாட்டில் காங்கிரஸ் - சோஷலிஸ்ட் கட்சியை அமைக்கப் பாடுபட்ட வருமான சி.பி. இளங்கோ நாகர்கோவிலில் காலமான செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இவரது மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் ஆர். நல்லகண்ணு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# 21 ஆண்டுகளுக்கு முன்

சி.பி. இளங்கோ

1942-ம் ஆண்டு வேலூர் மத்தியசிறையில் (2-வது உலக மகாயுத்த காலத்தில்) தடுப்புக் காவல் சட்டப்படி பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்த என்னையும், அமரர் ஜீவாவையும் அரசாங்கம் விடுதலை செய்தது. விடுதலை செய்யப்பட்ட நாங்கள் பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்தவர்களாதலால் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு, போலீஸ் பந்தோபஸ்துடன் எங்கள் ஊர் கொண்டு சேர்க்கப்பட்டோம். அன்று திருவிதாங்கூர் சமஸ்தான திவான்ஜியாக இருந்த டாக்டர் சர்.ஸி.பி. ராமசுவாமி ஐயரின் போலீசார் எங்கள் நடவடிக்கைகளை கண்காணித்து வந்தனர்.

வேலூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு தமிழ்நாட்டிலிருந்து வெறியேற்றப்பட்ட எங்களுக்கு எங்கள் சொந்த பிரதேச மக்கள் தங்கள் கிராமங்களுக்கு அழைத்து வரவேற்பு அளித்து வந்தனர். சிறையிலிருந்து வெளிவந்த சில தினங்களில் நாங்கள் பல ஊர்கள் சென்று அன்றைய நமது கொள்கைகளை விளக்கி வந்தோம். அப்பொழுது நாஞ்சில் நாட்டில் மக்களிடையே ஒரு புதிய விழிப்பும் உணர்வும் ஏற்பட்டது. அதைக்கண்ட அன்றைய திவான் சர்.சி.பி. ராமசுவாமி ஐயர் திருவிதாங்கூர் சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தில் சென்னையிலிருந்து தென் திருவிதாங்கூர் வந்து சேர்ந்திருக்கிற ஜீவானந்தம், இளங்கோ இருவரும் நாட்டில் 'கொந்தளிப்பை' ஏற்படுத்தி வருவதாகவும் அவர்கள் நடவடிக்கை அமைதியான சூழ்நிலைக்குப் பாதகம் விளைவிப்பதாகவும், எனவே அரசாங்கம் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப் போவதில்லை என்றும் கூறினார். அவர் சட்டமன்றத்தில் கூறி முடித்த ஓரிரு தினங்களில் எங்களுக்கு பொதுக்கூட்டங்களில் பேசுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் ஜீவா அவரது சொந்த ஊரான பூதப்பாண்டியை விட்டு வெளியேறக் கூடாது என்றும் நான் பூதப்பாண்டி போலீஸ் எல்லை விட்டு வெளியே செல்லக்கூடாதென்றும் தடைவிதிக்கப்பட்டோம். இந்த அரசாங்க தடைவிதிப்பினால் மக்கள் எங்களை நேரில் சந்திக்கவும் எங்களுடன் கலந்து பேசவும் பெருவாரியாக வந்துசெல்ல ஆரம்பித்தனர்.

இந்த காலகட்டத்தில் (1942-ல்) காந்திஜி தலைமையில் அறப்போர் நாடு முழுவதும் நடந்து வந்தது. அதன் எதிரொலியாக நாகர்கோவிலும் பலர் அறப்போரிலீடுபட்டு அரசாங்க தடையை மீறி சிறைசென்று வந்தனர். பின் அக்டோபர் மாதம் காந்தி ஜெயந்தி வந்தது. ஜீவா பூதப்பாண்டியில் காந்திஜெயந்தி கூட்டத்தில் பேசியதற்காக கைது செய்யப்பட்டார். அதுபோல நான் தெரிசனங்கோப்பில் காந்தி ஜெயந்தி கூட்டத்தில் பேசியதற்காக கைது செய்யப்பட்டு பூதப்பாண்டி போலீஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டேன். பூதப்பாண்டி போலீஸ் நிலையத்திலிருந்த எங்கள் இருவரையும் என்ன செய்வது என போலீஸ் அதிகாரிகள் திருவனந்தபுரத்தில் இருந்த பெரிய அதிகாரிகளுடன் கலந்து பின் எங்கள்மீது தடையை மீறியதாக வழக்கு தொடர்ந்தார்கள். முதலில் எங்கள் வழக்கு பத்மனாபபுரம் டிவிஷன் பேஷ்காராக இருந்த திரு. ராமானுஜ ஐயங்கார்

கோர்ட்டிற்கு மாற்றப்பட்டது. அவர் எங்கள் வழக்கை கோட்டார் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்கு மாற்றினார். பூதப்பாண்டி லாக்கப்பிலிருந்த எங்களை தக்கலை லாக்கப்பிற்கும் பின் கோட்டார் லாக்கப்பிற்கும் மாற்றினார்கள். கோட்டார் லாக்கப்பில் இடவசதி இல்லாததால் நாங்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் இடலாக்குடி லாக்கப்பிற்கு மாற்றப்பட்டோம்.

கோட்டார் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் எங்கள் வழக்கை விசாரணை செய்து எங்களைத் தண்டித்து திருவனந்தபுரம் மத்திய சிறைக்கு அனுப்பி வைத்தார்.

சர்.சி.பி. ராமசுவாமி ஐயர் திவானாக இருந்த காலத்தில் திருவிதாங்கூரில் அன்று போலீஸ் அடக்குமுறை கொடூரமாக இருந்தபோதிலும் எங்களை போலீஸ் லாக்கப்புகளில் போலீசார் நல்ல முறையில் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

திருவனந்தபுரம் மத்திய சிறையில் எங்களுக்கு திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் பிரமுகரான சி. கேசவன், ஏ.ஈ. ஜான் பிலிப்போஸ், ஜி. ராமசந்திரன், ஆணிமஸ்கிரின் பட்டம்தாணு பிள்ளை மற்றும் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் 1947-க்குப்பின் அன்றைய திருவிதாங்கூர் ஆட்சியை நடத்திய அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றனர். அந்த சிறையிலிருக்கும் போதே தோழர் எம்.என். கோவிந்தன் நாயரோடும் நெருங்கிய தொடர்பு கொண்டோம்.

மத்திய சிறையிலிருந்து நாங்கள் நாகர்கோவில் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தோம். அந்த அப்பீலுக்கு எங்களுடன் சிறையிலிருந்து விடுதலைபெற்ற நாகர்கோவில் பிரபல வழக்கறிஞர் திரு. ஏ. சங்கரப்பிள்ளை ஆஜராகி வாதாடினார். இறுதியில் நாங்கள் விடுதலை அடைந்தோம். விடுதலை அடைந்து வெளிவந்த நாங்கள் நாஞ்சில் நாட்டிலும், தென் திருவிதாங்கூரிலும் முழுமுச்சுடன் விவசாய சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், பாலர் சங்கங்கள், நூல் நிலையங்கள் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வந்தோம்.

1942-ல் வேலூர் சிறையிலிருந்து வெளி வந்ததிலிருந்து 1945-ல் தடைநீங்கி தமிழகம் திரும்பும் வரையிலும் நாஞ்சில் நாட்டில் என்றும் இல்லாத ஒரு புதிய அரசியல் ஜீவா ஏற்படுத்தி விட்டார். அந்த காலகட்டத்தில் அவர் பங்கு கொள்ளாத எந்த பொது நிகழ்ச்சியும் நடந்ததில்லை. ஜீவா தனது சேவையை நாஞ்சில் நாடு தென் திருவிதாங்கூருடன் நிறுத்திக் கொள்ளாமல் திருவிதாங்கூரின் பல பகுதிகளுக்கும் குறிப்பாக திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், ஆலப்புழை மற்றும் பல இடங்களுக்கும் சூறாவளிச்சுற்றுப் பிரயாணம் செய்து மக்களைத் தட்டி எழுப்பி வந்தார். அன்று திருவிதாங்கூர் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவு பெருவாரியாக இருந்தனர். அவர்கள் தங்கள் நலனையும் உரிமையையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஸ்தாபன ரீதியாக ஒன்றுசேராமல் இருந்ததால் தமிழ் மக்களின் அவதியை அறிந்த ஜீவா தமது நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து திருவிதாங்கூர் தமிழர்களை ஒன்று திரட்டுவதற்கான முயற்சியிலீடுபட்டு அகில திருவிதாங்கூர் தமிழர் சங்கம் ஏற்படுத்தி, அதனுடைய முதல் மகா நாட்டை திருவனந்தபுரம் விக்டோரியா ஜுபிலி ஹாலில் நடத்தினார். அந்த மகாநாட்டில் திருவிதாங்கூர் திவானாக இருந்த டாக்டர் சர்.சி.பி. ராமசாமி ஐயரும், திருவிதாங்கூர் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயரும் கலந்துகொண்டு திருவிதாங்கூர் தமிழர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுசேருவதைப் பாராட்டிப் பேசினார். ஆனால் அந்த மகாநாட்டில் ஜீவா பேசுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் திருவிதாங்கூர் தமிழர்கள் ஒன்று சேருவதற்கு அச்சாணியாக இருந்த ஜீவா மகாநாட்டில் பேச அனுமதிக்கப் படாததை சூசமாக அறிந்த மக்கள், ஜீவாவைப் பேசும்படியாக ஏற்படுத்திய நிர்ப்பந்தத்தினால் ஜீவா பேச அனுமதிக்கப்பட்டு சிம்ம கர்ஜனை செய்தார்.

அன்று ஜீவா எடுத்த முயற்சி பட்டபாடு வீணாகாமல் பின் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஏற்படுவதற்கு அது ஒரு முன்னோடியாக அமைந்தது. ஜீவா நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்தபோது நாகர்கோவிலை அடுத்துள்ள உப்பளங்களில் வேலைபார்த்து வந்த

உப்பளத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி உப்பளத் தொழிலாளர் சங்கம் செயல்படுவதற்கும் முக்கிய பங்கு வகித்து வந்தார்.

நாகர்கோவில் நகரில் வர்த்தக தொழிலாளர்களுக்கு முதன் முதலில் மாதாந்திர விடுமுறை கிடைப்பதற்கும், அவர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுசேருவதற்கும் ஜீவா பெரும் பாடுபட்டு, அவர்கள் வாராந்திர விடுமுறை பெற்றதுடன், அவர்களது வர்க்க ஸ்தாபனம் ஏற்பட்டது.

ஜீவா நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்த காலத்தில் முதன் முதலாக இங்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு கட்சி கார்டும், உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தோழர் கே.சி. ஜார்ஜ் நேரிடையாக வந்திருந்தார். கட்சியினுடைய கொள்கை, கட்சிக்கு அப்பாற்பட்ட பொதுமக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வந்தது. சோவியத் யூனியனைப் பற்றியும் சோஷலிசத்தினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் நாஞ்சில்நாட்டு மக்கள் நல்லமுறையில் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு ஜீவா இங்கிருந்தது நல்லதொரு வாய்ப்பாக இருந்தது.

ஜீவா இங்கிருந்தபோது கட்சி ஸ்தாபனத்தையும் பொதுஜன இயக்கங்களையும் கட்டி வளர்ப்பதற்கான அஸ்திவாரம் இட்டதுடன் கவிச் சக்கரவர்த்தி சுப்ரமணிய பாரதியாரின் பாடல்களை அதன் உட்கருத்துகளை கிராமந்தோறும் முழங்கி விளக்கி வந்தார். 1944 பிப்ரவரி இறுதியில் நாஞ்சில் நாடு முழுவதும் ஏற்பட்டிருந்த வாலிபர் சங்கங்கள் முழுவதையும் இணைத்து நாஞ்சில் நாடு மத்திய வாலிபர் சங்க முதலாவது மாநாடு சீரும் சிறப்புடனும் ஒழுகினசேரி தியேட்டரில் நடைபெற்றது. மாநாட்டில் ஜீவா, கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் திரு. ராமலிங்கம்பிள்ளை மற்றும் பலர் கலந்துகொண்டனர். அந்த மாநாடு நாஞ்சில் நாட்டு இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய உற்சாகத்தையும் விழிப்பையும் ஏற்படுத்தியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை ஒத்துக்கொள்ளாதவர்களும் கூட ஜீவாவின் தன்னலமற்ற சேவையையும் அவரது தமிழார்வத்தையும் இலக்கிய திறமையையும் மக்களோடு பழகும் அவருக்கே உரித்தான பண்பையும் நேசத்தையும் அன்றும் இன்றும் என்றும் பாராட்டுவர்.

தடை நீக்கப்பட்டதும் ஜீவாவை இங்கிருந்து அனுப்ப மனமில்லா மனத்துடன் மக்கள் அனுப்பி வைத்தனர். பின் அடிக்கடி ஜீவா இங்கு வருகிறார் என்றால் அவரைப் பார்க்கவும், அவரது பேச்சைக் கேட்கவும் வேறு எந்த வெளியூர் தலைவர்கள் வந்தாலும் கூடாத அளவிற்கு மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி கேட்டு வந்தனர். அவரை இங்கு எல்லோரும் எந்த கட்சியை சார்ந்தவர்களாயிருந்தாலும் கூட தங்கள் சொந்த உறவினராகவே கருதி வந்தனர்.

தோழர் ஜீவா மாஸ்கோ செல்லுவதற்கு முன்னும் மாஸ்கோ சென்று சென்னை திரும்பிய சில நாட்களிலும் இங்கு வரவழைக்கப்பட்டார். ஜீவாவிற்கு நாஞ்சில் மக்கள் 1962 அக்டோபர் மாதம் நாகர்கோவில் நகரில் சர்வகட்சியைச் சார்ந்த பிரமுகர்களும் எந்த கட்சியைச் சாராதவர்களும் சாதாரணமாக பொதுவாழ்வில் ஆர்வமும் அக்கறையும் காட்டாமல் ஒதுங்கியிருக்கிறவர்களும் ஒன்று சேர்ந்து அவருக்கு மகத்தான வரவேற்பு அளித்து அவர் வாயிலாக சோவியத் நாட்டின் வளர்ச்சியைப்பற்றி கேட்டனர். அதுபோல அவரது சொந்த ஊரான பூதப்பாண்டியிலும் சுற்று வட்டார கிராமங்களிலும் அன்று அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் மீண்டும் 63 ஜனவரியிலோ, பெப்ரவரியிலோ வருவதாகக் கூறி நேராக தேசிய கௌன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ள விடைபெற்றுச் சென்றார். அப்படி விடைபெற்றுச் சென்ற ஜீவா இனி என்றுமே காண முடியாதவாறு மறைந்துவிட்டாரே என்று இவ்வட்டார மக்களும் குமரிமாவட்ட மக்களும் ஏங்கி நிற்கின்றனர்.

அமரர் ஜீவா நாமம் வாழ்க!

# தோழர். சி.பி. இளங்கோவும் நானும்

**கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்**

1954-ல் நான் திருத் தமிழக விடுதலைப் போராட்டத்தில் கலந்து தண்டிக்கப்பட்டு திருவனந்தபுரம் மத்திய சிறையில் இருந்தபோது, சிறையில் புன்னபுரை - வயலாறு விப்பளவத்தில் (சுதந்திர போராட்டம்) ஒன்றுபட்ட சுதந்திர விடுதலைப் போராட்ட வீரர்கள் - சிலர் திருவனந்தபுரம் பூஜைபுரை - மத்திய சிறையில் இருந்தனர்.

சிறையில் அவர்களை சந்திக்கவும் - உரையாடவும் நல்ல வாய்ப்பு எனக்கு அன்று கிடைத்தது. அப்போது அவர்களெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் என்று அறிந்தேன்.

நான் சிறையிலிருந்த காலம் பூராவும் - கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை எனக்கு அறிமுகப்படுத்தி என்னை ஒரு கம்யூனிஸ்ட் டாகவே உருவாக்கினர்.

சிறையில் சந்தித்த தலைவர்களில் ஒருவர் தோழர் தொம்சன் என்ற தோமஸ். அவர் அந்த காலத்திலேயே பி.ஏ. பட்டதாரி - சிறந்த மார்க்ஸிஸ அறிஞர், நான் பிற்காலத்தில் ஒரு போராளியாக உருவானதற்கு - அரசியல் பாடம் கற்று தந்த அரசியல் ஆசான்.

நான் சிறையிலிருந்து வெளி வருகின்ற போது தமிழக கம்யூனிஸ்ட் தலைவர்கள் தோழர்கள் ப. ஜீவானந்தம், சி.பி. இளங்கோ, ஜி.எஸ். மணி, அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் - அதன் மூலம் தொடர்ந்து எனது அரசியல் பயணம் தொடரவும் அறிவுரை வழங்கி அறிமுக கடிதம் ஒன்று கொடுத்தார் தோழர் தோமஸ்.

அன்று நாகர்கோவில் நகரத்தில் பிரபலமாக இருந்த தோழர் சோமுவிடம் கடிதத்தைக் கொடுத்து என்னை அறிமுகப்படுத்தினேன்.

இன்னும் சிறிது நேரத்தில் தோழர் சி.பி. இளங்கோ வந்துவிடுவார் - சந்திக்கலாம் என்றார்.

தோழர் சோமு சொன்னது போல - சிறிது நேரத்தில் தோழர் சி.பி. இளங்கோ வந்தார். அவருக்கு என்னை அறிமுகப்படுத்தி நான் கொடுத்த கடிதத்தை சி.பி.யிடம் கொடுத்தார்கள்.



கடிதத்தைப் படித்த சி.பி. என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். அன்று தொடங்கிய எங்கள் அரசியல் பயணம் தொய்வின்றி தொடர்ந்தது.

நடந்த நகர்மன்ற தேர்தலில் 7 வது வார்டு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கதிர் அரிவாள் சின்னத்தில் போட்டியிட்டார் சி.பி.

தேர்தல் பொறுப்பை தோழர் கே.எல்.எஸ் - அவர்களுடன் இணைந்து செயல்பட்டேன். தேர்தலில் ஆதிக்க சமூகத்தின் அச்சுறுத்தல் - என்னும் பல்வேறு நெருக்கடிகளையெல்லாம் கொடுத்து அச்சுறுத்தினர் - அவைகளைல்லாம் எதிர்கொண்டு - தேர்தலில் தோழர் சி.பி. வெற்றி பெற்றார். தோழர் சி.பி.யை ஆதரித்து தேர்தல் நேரத்தில் தோழர் பி. ராமமூர்த்தி கலந்து பூங்கா திடலில் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. என்னை சந்திக்கும் போதெல்லாம் தோழர் சி.பி. வாஞ்சையுடன் என்னை தம்பி என்றே அழைப்பார். அவருடைய எல்லா சுக துக்கங்களில் நான் எப்போதும் அவருடன் இருப்பேன். அது எனக்கு மனநிறைவையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது தம்பி. சந்திரமோகனுடைய தாயார். அண்ணன் சி.பி-யுடைய முதல் மனைவி இறந்தபோது அவரின் இறுதிச் சடங்கை நிறைவேற்றும் அந்த நிகழ்வில் கூடவே இருந்து நடத்தினேன். அந்த அளவுக்கு அண்ணன் தோழர் சி.பி. யுடன் எங்கள் நட்பும் உறவும் அண்ணன் இறுதி காலம்வரை தொடர்ந்தது. இன்று அண்ணன் சி.பி.யுடைய பிள்ளைகள் காலத்திலும், அது தொடர்கிறது. அண்ணன் தலைவர் தோழர் சி.பி. அவர்களுடைய 100-வது ஆண்டு விழா என் தலைமையில் நடைபெறுவது எனக்கு மன நிறைவைத் தருகிறது.

*வாழ்க சி.பி. நாமம்*
*வளர்க - அவர் புகழ்*

# இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவருமான தியாகி சி.பி. இளங்கோவின்

# வாழ்வும் போராட்டங்களும்

| | | |
|---|---|---|
| பெயர் | : | சி.பி. இளங்கோ |
| தந்தை பெயர் | : | பிரம்மநாயகம்பிள்ளை |
| தாயார் | : | பகவதி அம்மாள் |
| பிறந்த ஊர் | : | செறுமடம் - தோவாளை தாலுகா, குமரி மாவட்டம் |
| கல்வித்தகுதி | : | 8-ஆம் வகுப்பு |
| பிறந்த நாள் | : | 15-06-1915 |
| இறந்த நாள் | : | 30-07-1999 |

**போராட்டங்கள்**

**1924-1925** - பள்ளிப் பருவத்திலேயே தேசியத் தலைவர்களுடன் சேர்ந்து தெரிசனங்கோப்பு கே. லெட்சுமணப்பிள்ளை சங்கரன்கோவில் பாரத நேசன் ஆகியோருடன் வில்வண்டியில் கதர் துணியை கிராமம் கிராமமாகச் சென்று விற்பனை செய்தல். மாலையில் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, அன்னிய துணி பகிஷ்காரம் பற்றிய பிரச்சாரம்.

**1927** - சென்னையில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் போராட்டத்தில் பங்கேற்பு.

நீலன் சிலை அகற்றும் போராட்டம்.

சிறு வயதான இளங்கோவை தமிழக முன்னாள் சபாநாயகர் புலுசு-சாம்பமூர்த்தி- சோமயாஜுலு போன்ற தலைவர்கள் சிராவயல் காந்தி ஆஸ்ரமத்திற்கு அனுப்பினார்கள்.

**1927-1929** - சிராவயல் காந்தி ஆஸ்ரமத்தில் படித்துக்கொண்டே தீண்டாமை ஒழிப்பில் ஈடுபட்டு வந்தார்.

**1930** - ஈரோட்டில் 2-வது சுயமரியாதை மாநாட்டில் பங்குகொள்ளல்.

காந்திஜி கைதைக் கண்டித்து ஈரோட்டில் ஈஸ்வரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் சொற்பொழிவு.

மதுரை வருகை. தாயம்மாள், சீதாலெட்சுமி அம்மாள், எ. வைத்தியநாத அய்யர், சீனிவாச அய்யங்கார், புலி மீனாட்சி சுந்தரம் இவர் களோடு இணைந்து காங்கிரஸ் பிரச்சாரம்.

கோவில்பட்டியில் எல்.ஆர். குருசாமி நாயுடு சோமயாஜுலு இவர்களோடு சேர்ந்து வாசுதேவநல்லூர், புளியங்குடி, எட்டையாபுரம், சாத்தூர், கழுகுமலை, சங்கரன்கோவில் சுற்றுவட்டாரப் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்பு.

**1930-1931** - கோவில்பட்டி கோர்ட்டில் தண்டிக்கப்பட்டு 22-07-1930 - 26-06-1931 வரை செங்கல்பட்டு சிறுவர் சீனியர் அப்புருவ்டு ஸ்கூலில் அடைக்கப்படல். அட்மிஷன் நம்பர் 542.

இந்த வழக்கில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளை ஆஜரானார். இந்த வழக்கைப் பார்க்க அடிக்கடி காமராஜர் வந்து சந்தித்துச் செல்வார்.

ஜெயிலில் உண்ணாவிரதம் இருந்ததால் முக்காலியில் கட்டிவைத்து அடித்தார்கள்.

**1933-1934** - சென்னையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறையில் அடைப்பு.

**1935** - ஆந்திராவில் அரசியல் வகுப்பு நடைபெற்றதை பிரிட்டிஷ் அரசு தடை செய்தது. தடையை மீறி வகுப்பு நடந்தது. அதில் கலந்துகொண்டதால் அடி-உதைபட்டு-குண்டூர் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டு ராஜமுந்திரி சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

**1936-1939** - சிறையில் இருந்து வந்து மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் சென்னையில் ஈடுபடுதல்.

**1939-1940** - யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் - மதுரை வரும்போது கைது செய்யப்பட்டு திண்டுக்கல் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் சிறைகளில் அடைக்கப்படுதல்.

விடுதலைக்குப்பின் சென்னையில் தேசியத் தலைவர்களான லோக்நாயக் ஜெயபிரகாஷ் நாராயணன், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோரை சந்தித்தல். அவர்களின் ஆலோசனைப்படி மீண்டும் பிரச்சாரப் பணிகள்.

**1941-1942** - மீண்டும் யுத்த எதிர்ப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டு 03-04-1941-ல் இருந்து 19-06-1942 வரை கான்விக்ட் நம்பர் 127 ஆக வேலூர் சிறையில் அடைக்கப்படல். ஜெயில் கொடுமைகளுக்கு எதிராக 23 நாட்கள் உண்ணாவிரதம் Released Conditionaly as per G.O. No. 1698 Public (General) உத்தரவுப்படி சென்னை மாநிலத்திற்குள் நுழையக்கூடாது என தடைவிதித்து - திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கொண்டு விட்டார்கள்.

அதைத் தொடர்ந்து நாஞ்சில் நாட்டு பகுதியில் விவசாய சங்கம், நூல் நிலையங்கள், இளைஞர் சங்கங்கள் ஆகியவற்றை நிறுவி பிரச்சாரம் மேற்கொள்ளல்.

**1943-1944** - தெரிசனங்கோப்பு ஊரில் காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடியதால் (திவான் சர்.சி.பி. இராமசாமி அய்யர்) உத்தரவுப்படி கைது செய்யப்பட்டு குமரிமாவட்டத்திலுள்ள கோட்டார், இடலாக்குடி, தக்கலை, குழித்துறை ஆகிய லாக்கப்புகளில் அடைக்கப்பட்டு திருவாங்கூர் பாதுகாப்பு சட்டப்படி M.E. as Convict No. 4821-ன்படி திருவனந்தபுரம் மத்திய சிறைச்சாலையில் 15-04-1118 - 12-07-1118 வரை தண்டனைக் கைதியாக இருத்தல்.

**1945-1946** - தொடர்ந்து உப்பளம், தொழிற்சங்கம், நகரசுத்தி தொழிலாளர் சங்கம், வர்த்தக தொழிலாளர் சங்கங்கள் அமைப்பதில் ஈடுபடல்.

**1947** - சுசீந்திரம் தேரில் தேசியக்கொடி ஏற்றும்போது துப்பாக்கி சூடு நடைபெற்றது. பலர் உயிரிழந்தனர்.

அந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டு போலீஸ்காரரின் கொடுமைகளுக்கு உள்ளாகி வலது கை நடுவிரல் நரம்பு எடுக்கப்பட்டது.

**1951** - தினமலர் பத்திரிகை நிருபராக பணிபுரிதல்.

**1949-1959** - நாகர்கோவில் நகரமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படல்.

**1955** - தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரல்.

**1972** - சுதந்திர வெள்ளிவிழாவை யொட்டி டெல்லியில் ஜனாதிபதி V.V. கிரி, பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களும் தாமிரபத்திரம் அளித்து சிறப்பித்தல்.

**1977** - ஜனதா ஆட்சியில் அன்னை இந்திராகாந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்படல்.

**1980-லிருந்து** - தொடர்ந்து இந்திய-சோவியத் கலாச்சார கழகத்தின் குமரி மாவட்ட செயலாளராக செயல்படுதல்.

# "வரலாற்று நாயகர் சி.பி. இளங்கோவுக்கு எடுக்கும் நூற்றாண்டு விழா

## - எல்லாவகையிலும் சிறக்க காலமகளை யாசிக்கிறேன்"

நாஞ்சில் சம்பத்

இருண்டு கிடந்த இந்தியக் கிழக்குகள் விடிய இன்னுயிர்பற்றி கவலைப்படாமல் பன்னிரண்டு வயதிலேயே பூபாளம் பாடிய தியாகசீலர் சி.பி. இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.


அரும்பும் வயதிலேயே நீதியின் மீது தாகம் இருந்ததால் 'நீதிவாதி' எனும் இதழை நடத்திய பத்திரிகையாளர் சி.பி. இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.

பொதுவுடைமைச் சித்தாந்தத்தை இலக்கிய வீதியில் எடுத்துச் செல்லுகிற பயணத்தில் அதிசயங்களை நிகழ்த்திய ஜனசக்தியில் பணியாற்றிய இலக்கிய நேசனுக்கு நூற்றாண்டு விழா.

வங்காளத்தை வெள்ளை ஏகாதிபத்தியம் இரண்டாகப் பிரித்த காலகட்டத்தில் தேசமெல்லாம் உந்தி எழுந்து நிற்க உச்சரிக்கப்பட்ட வந்தே மாதரம் எனும் இலட்சிய கீதத்தை தனது தொட்டில் பிரதேசத்தில் உச்சரித்த சாதகப் பறவை அப்பா இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.

பாழ்பட்டு நின்ற பாரத தேசந்தன்னை விடுவிக்க வந்த காந்தியமகானின் பேச்சை கால்ச்சட்டைப் பருவத்தில் கேட்டு கதரணிந்த காந்தீயசீலன் அப்பா இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.

1927-ல் சைமன் கமிஷனைக் கண்டித்து தலைநகர் சென்னையில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு கால்ச்சட்டைப் பருவத்திலேயே கைதாகி காராக்கிரகத்தை முத்தமிட்ட சிறைப் பறவைக்கு நூற்றாண்டு விழா.



இதயத்தைக் கீழே இறக்கி வைத்த கொடுங்கோலன் நீலன் சிலையை அகற்றுகிற அறப்போரில் ஈடுபட்ட போராளிக்கு நூற்றாண்டு விழா.

"அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர் உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே" என்று ஞானசம்பந்தர் பாடிய திருச்செங்கோடு ஆசிரமத்தில் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியிடம் பயிற்சி பெற்ற தேசீயவாதிக்கு நூற்றாண்டு விழா.

செந்தமிழ் வளர்த்த செட்டி நாட்டில் தமிழ் வளர்த்த சொக்கலிங்கம் மற்றும் நமது மாவட்டத்தைச் சேர்ந்த கும்பலிங்கம் பிள்ளையும் நடத்திவந்த சிராவயல் காந்தி ஆசிரமத்தில் தொண்டால் பொழுதளந்த தூயவருக்கு நூற்றாண்டு விழா.

அண்ணல் காந்தியடிகள் விடுதலைப் போராட்ட காலத்தில் கைது செய்யப்பட்ட போது தன்மானப் பெரியார் பிறந்த ஈரோட்டில் ஈசுவரன் தலைமையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டத்தில் அக்கினி மணக்கப் பேசிய ஆவேசப் பேச்சாளனுக்கு நூற்றாண்டு விழா.

ஆதிக்க வெறி பிடித்த பிரிட்டீஷ் அரசைக் கண்டித்து கோவில்பட்டியில் உரையாற்றிய தற்காக மதுரையில் கைது செய்யப்பட்டு சிறுவர் அறையில் சிறைவைக்கப்பட்ட தேச பக்தருக்கு நூற்றாண்டு விழா.

சிறைச்சாலை சித்திரவதைக்கூடமானபோது சிறைக்குள் உண்ணா நோன்பிருந்து அதைத் திரும்பப் பெற மறுத்ததால் கசையடிக்கு ஆளாகி அந்த நாள் தினமணியிலும் சுதேசமித்திரனிலும் செய்தியான வைராக்கியசாலிக்கு நூற்றாண்டு விழா.

1932-ல் நடைமுறைக்கு வந்த காந்தி இர்வின் ஒப்பந்தப்படியும் சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியின் வேண்டுகோள்படியும் சிறையில் இருந்து விடுதலையாகி மாடக்கூடல் மதுரை மாநகரில் வைத்தியநாத அய்யரின் வரவேற்பைப்பெற்ற புகழேணியின் உயரத்தைத் தொட்ட உச்சித் திலகத்திற்கு நூற்றாண்டு விழா.

கோடிக்கால் பூதமடா என்று பாடிப்பரவிய கம்யூனிசப் புலவன் பூதப்பாண்டி ஜீவானந்தத்தின் தோழமை கிடைத்ததற்குப் பிறகு நாகர்கோவில் தொகுதியில் கம்யூனிஸ்டு கட்சியின் வேட்பாளராக களத்தில் நின்ற சி. சங்கரின் வெற்றிக்கு விழி மூடாமல் பணியாற்றி வியர்வைப் பாசனம் செய்த கம்யூனிஸ்டு களப்பணியாளனாய் எல்லோரது கவனத்தையும் கவர்ந்த பொதுவுடைமைத் தொண்டருக்கு நூற்றாண்டு விழா.

கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் ஜீவாவுடன் கைகோர்த்து திருவிதாங்கூர் தமிழர் சங்கம் உருவாக கருவாக இருந்த கர்த்தாவுக்கு நூற்றாண்டு விழா.

இப்போது நாகர்கோவிலில் விடுமுறை நாளாக வெள்ளிக் கிழமை அமுலில் இருக்கிறது என்றால் அதற்குப் புள்ளி வைத்தவர் தியாகி சி.பி. இளங்கோ. அந்த தீராதி தீரருக்கு நூற்றாண்டு விழா.

சர்.சி.பி. இராமசாமி அய்யரின் ஆதிக்கம் திருவிதாங்கூர் தமிழர்களை அழுத்திய கால கட்டத்தில் அந்த ஆதிக்கத்தின் ஆரக்கால்களை அசைத்த அஞ்சா நெஞ்சனுக்கு நூற்றாண்டு விழா.

வாய்ப்பூட்டுச் சட்டத்திற்கு ஜீவாவோடு சேர்ந்து தனது போராட்ட வாழ்வில் முகம் கொடுத்து நமக்கெல்லாம் முகவரி வாங்கித் தந்த பெருமகன் அப்பா சி.பி. இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.

உள்ளாட்சித் தேர்தலில் நாகர்கோவில் நகர் மன்றத்தில் ஏழாவது வட்டத்தில் செல்வாக்கும் செல்வச் செழிப்பும் கொண்ட திரையரங்க அதிபர் நல்லசிவத்தை எதிர்த்து களம் கண்டு ‘சிட்டுக் குருவிகள் வல்லூறுகளை வெல்லும். வெட்டுக் கிளிகள் யானைகளை வீழ்த்தும்’ என்பதை நிரூபிக்கிற வகையில் வாகை சூடிய வரலாற்று நாயகனுக்கு செப்டம்பர் 5-ல் நூற்றாண்டு விழா.

தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி அருகில் இருக்கும் பொருட்காட்சித் திடலுக்கு கால்கோள் விழா கண்ட நாயகன் அப்பா சி.பி. இளங்கோவிற்கு நூற்றாண்டு விழா.

விடுதலைத் திருநாள் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் டெல்லியில் நடந்த போது அன்னை இந்திரவாலும் காங்கிரஸ் நூற்றாண்டு விழா சென்னையில் நடந்தபோது இளம் தலைவர் ராஜீவ்காந்தியாலும் கவுரவிக்கப்பட்ட தியாகத்தின் திருவுருவத்திற்கு நூற்றாண்டு விழா.

விடுதலைத் திருநாள் வெள்ளி விழாவின் போது ஜனாதிபதி வி.வி. கிரியிடம் இருந்து தாமிரப்பத்திரமும், மன்னாதி மன்னன், மஞ்சள் நிறக் கர்ணன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரிடமும் இருந்து தங்கப்பதக்கமும் பெற்ற பெருமைக்குரிய எங்கள் அப்பாவிற்கு நூற்றாண்டு விழா.

மக்கள் சிவில் உரிமைக் கழகத்திலும் இந்தோ சோவியத் கலாச்சாரக் கழகத்திலும் திறம்படவும் அறம்படவும் கடமையாற்றிய கர்ம வீரருக்கு நூற்றாண்டு விழா.

தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா! இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம் என்ற பாட்டு வரிகளைப் படிக்கிற பொழுதெல்லாம் விடுதலையை விரும்புகிறவர்களின் நெஞ்சில் ஓவியமாக மலர்ந்து விடுகிற மதிப்பிற்குரியவர் தியாகி சி.பி. இளங்கோ.

தாயகத்தின் விடுதலைக்காகவும் வெளிச்சத்திற்காகவும் தன்னை ஆகுதி ஆக்கிக்

கொண்ட பெருமகன் தன் வாழ்வில் வசந்தத்தைக் கண்டதுமில்லை. அதற்காக கவலைப்பட்டதும் இல்லை. இயேசு சிலுவையைத் தூக்கி தானே தோளில் போட்டுக் கொண்டதைப் போல் சுதந்திரத்திற்காக தன்னை மீசை அரும்பும் வயதிலே அர்ப்பணித்துக் கொண்ட அவரது பற்றற்ற தியாகம் இனி வருகின்ற தலை முறைக்குத் தெரிய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தான் ஆருயிர்த் தம்பி லட்சுமணன் தன்னை இந்தத் தரணிக்குத் தந்த தன் தந்தைக்கு நூற்றாண்டு விழாவை எடுக்கிறார்.

தன் வியர்வையின் விளைச்சலில் அவன் உருவாக்கிய காமரின் இண்டர்நேஷனல் பள்ளியில் தன் தந்தைக்குச் சிலை நிறுவி தந்தையின் நினைவில் அவன் நாளும் நனைவதை நான் அறிவேன். 'மகன் தந்தைக்கும் ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல்லெனும் சொல்' என்ற வான்புகழ் வள்ளுவனைப் படிக்கும்போது என் நெஞ்சில் படித்தேனாய் இனிக்கிறான் இலட்சுமணன். மேடும் பள்ளமும் நிறைந்த என் வாழ்வில் என் திசைகளில் தேனைச் சொரிகிற என் தம்பிக்கு அவன் தந்தையின் அருளாசி பரிபூரணமாகக் கிடைத்திருக்கிறது. கவலை என்னை நெருக்கும் போதெல்லாம் நான் நிலைகுலையாமல் இருப்பதற்குக் காரணம் என் தம்பி இலட்சுமணன் தான். தேசாந்திரியாகத் திரிகிற என் வாழ்வில் திசைகளின் தீபமாய் இருக்கும் என் தம்பி தியாகத்தின் அடையாளமாய் விடுதலையின் சின்னமாய்த் திகழ்கிற நூற்றாண்டுகளின் வரப்பையும் கடந்து வாழப்போகிற வரலாற்று நாயகர் சி.பி. இளங்கோவுக்கு எடுக்கும் விழா எல்லா வகையிலும் சிறக்க காலமகளை யாசிக்கிறேன்.

# தியாகி சி.பி. இளங்கோவின் குடும்ப உறவுகள்

**தியாகி சி.பி. இளங்கோவின் முதல் மனைவி - திருமதி. முத்துலெட்சுமி**
**குழந்தைகள் : 4 ஆண் மக்கள்**

1. சந்திரமோகன் - மனைவி மரியசார்லெட்
   பிள்ளைகள் : வினோத் - மனைவி சுபா
   அருணாலெட்சுமி - கணவர் - ஜிம்மிகார்ட்டர்
   பையன் - இர்வின்வால்டர்
2. ஸ்டாலின் - மணமாகவில்லை 2006-ல் மரணம்
3. கோபாலன் - மனைவி சிவபார்வதி
   பிள்ளைகள் : அருண் - மனைவி தீப்தி
   பையன் - கிரண்
4. பரமேஸ்வரன் - மனைவி சத்தியா
   பிள்ளைகள் : கார்த்திக் இளங்கோ

**தியாகி. சி.பி. இளங்கோவின் 2 வது மனைவி திருமதி. சரஸ்வதி**
**குழந்தைகள் : 4 ஆண் மக்கள்**

1. லெட்சுமணன் - மனைவி ஷீபா
   பிள்ளைகள் : ஆகாஷ் இளங்கோ, அபிலாஷ்
2. ராமச்சந்திரன் - மனைவி அனந்தலெட்சுமி
   பிள்ளைகள் : சரஸ்வதி - அபர்ணா
3. ஜீவா - மனைவி லதா
   பிள்ளைகள் : லட்சுமிபிரியா, சிந்துஜா
4. விஸ்வநாதன் - மனைவி சுதா
   பிள்ளைகள் : தீப்தி, ஆர்த்தி

# சி.பி. இளங்கோவின் முக்கிய சொற்பொழிவுகள் சுருக்கம்

இணைப்பு - I

## 06-08-1939 அன்று மெட்ராஸ் பீச் கூட்டத்தில் சி.பி. இளங்கோ ஆற்றிய உரைவீச்சு

**இவ்வுரைச் சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.**

**1. File No: 665/1924 Vol. IV English Records Government Secretariate, Trivandrum.**
**2. Madras Police Commissioner Office Records 26791/34-1 dtd. 22-09-1939.**

தோழர்களே கடந்த மாதம் 26-ம் தேதி மெட்ராஸ் போலீஸ் கமிஷ்னர் ஒரு உத்தரவு வழங்கியுள்ளார். அதில் தொழிலாளர்கள் மத்தியில் குறிப்பாக வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் மத்தியில் நான் உரையாற்றுவது முதலாளிகள் மற்றும் காவல் துறையினருக்கு எதிராகவும் அமைதியை சீர்குலைப்பதாகவும் உள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார். காங்கிரஸ் கூட்டத்தில் கூட இரு மாதங்களாக எனக்கு பேச அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நானிந்த தடையை உடைக்க முடிவு செய்து விட்டேன். கடந்த மாதம் 28-ம் தேதி திண்டுக்கல்லில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் திரு சீனிவாச ராவ், பி. ராமமூர்த்தி, ஜீவானந்தம் ஆகியோருடன் கலந்து கொண்டேன்.

144 தடையுத்தரவுக்கு எதிராக அமைந்த என் பேச்சினால் இதுவரை முதலாளிகளுக்கோ, காவல் துறையினருக்கோ உடல் ரீதியாக வன்முறையை ஏற்படுத்தியிருக்கிறதா என்று நான் கேட்கிறேன். சோஷலிஸ்டுகளையோ, தீவிர சார்பாளர்களையோ அழிக்க அரசும், காங்கிரஸ் மந்திரி சபையும், நினைக்குமேயானால் சுயமரியாதையுள்ள எந்த குடிமகனும் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். சுயமரியாதை உணர்வுள்ள, விடுதலை உணர்வுள்ள ஒவ்வொரு குடிமகனின் கடமையாக இந்த மீறலை நான் சொல்லுகிறேன்.

"புரட்சி ஓங்க" என வேலைநிறுத்தத்தின் போது கோஷமிடுவது ஏன் என்று கேட்கிறார்கள். உங்கள் சட்டரீதியான உரிமைகளை முதலாளி களிடமிருந்து மீட்டெடுக்கவே கோஷமிடுகிறோம். அரசின் காவல்துறையும், ராணுவமும் உங்கள் போராட்டத்தை ஒடுக்க வருவதை அறிவீர்கள். அதற்காகவே புரட்சி ஓங்குக என உரக்கச் சொல்கிறோம். சோஷலிஸ்டுகள் தொழிலாளி களோடும், விவசாயிகளோடும் தோளோடு தோள் நிற்பவர்கள். அவர்களது சட்டரீதியான உரிமைகளைப் பாதுகாக்க விழைபவர்கள். ராணுவமும், காவல்துறையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கருவிகள். இந்த ஒடுக்குமுறை ஆட்சியை ஒழிக்கவே புரட்சி ஓங்குக என்கிறோம்.

மெட்ராஸ்
07-08-1939

**ஆர். கோபால் ராவ்,**
(அரசு மொழிபெயர்ப்பாளர்)

இணைப்பு - II

# 07-08-1939 அன்று சி.பி. இளங்கோவின் சென்னை சொற்பொழிவு

தற்போதைய சமூக அமைப்பில் பசி, பட்டினி, வேலையின்மை ஆகியவற்றை ஒழித்து மகிழ்ச்சி, வேலைவாய்ப்பு, தேவைக்கேற்ற கூலி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு புது சமுதாயத்தை உருவாக்குவதே புரட்சி. இந்த மாற்றத்திற்கான போராட்டமே புரட்சி.

காங்கிரஸ் மந்திரிசபை பொறுப்பெடுத்துக் கொண்ட பிறகு நம் தொழிலாளர்களின் நிலையை எண்ணிப் பாருங்கள். மிகுந்த அதிருப்தி அளிக்கக் கூடிய நிலையே தற்போது நிலவுகிறது. இது குறித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வார்தா - வில் கூட இருக்கிறது.

அடுத்ததாக வங்காளத்தில் அரசியல் கைதிகளின் பட்டினிப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. அவர்களில் இருவர் விடுவிக்கப் பட்டுள்ளனர். சென்னையின் எந்த நாளிதழும் இதைத் தவறாக பிரசுரிக்கவில்லை. ஆனால் 'ஈனமணி' என்று அழைக்கப்படும் 'தினமணி' நாளிதழ் அதன் ஆசிரியர் சொக்கலிங்கம், சுபாஷ் சந்திரபோஸ் தலையீட்டினால் அல்ல, அரசு ஏற்கனவே அவர்களை விடுவிக்க தீர்மானித்த தாலேயே விடுவிக்கப்பட்டனர் என்று போராட்டத்தை கொச்சைப்படுத்தியிருக்கிறார்.

திரு. ஜவஹர்லால்நேரு அவர்களே சோஷலிஸ்ட்டுகளின் ஆதரவு காங்கிரசுக்கு வலிமை சேர்த்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

என்னுடைய இந்த இளவயதில் அதாவது 23 வயதில், நான் கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டுக்காக போராடிக் கொண்டிருக்கிறேன். 144 தடையுத்தரவை எதிர்த்து பலமுறை இப்போது போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். கைது செய்தாலோ, கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தாலோ எனக்கு அது குறித்து கவலையில்லை.

இந்த அரசு முடிவுக்கு வருமேயானால் தொழிலாளர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சிக்குள் பெருமளவில் சேர வேண்டும். சந்தர்ப்பவாதிகளும், சுயநலவாதிகளும் கமிட்டிக்குள் சேர்வதைத் தடுக்க வேண்டும். நீங்கள் காங்கிரஸ் மேல் அதிருப்தி கொள்ள வேண்டாம். கடைசிவரை தொழிலாளர் போராட்டத்தையும், ஒற்றுமையையும் குலைக்கும் முதலாளிகளையும், அரசையும் எதிர்ப்போம். இத்தனை தடைகளையும் மீறி தொழிலாளர் யூனியன் இன்று திடமாகவும், கட்டுப்பாடாகவும் அதன் சிகரத்தில் உயர்ந்து நிற்கிறது.

மெட்ராஸ்,
07-08-1939


**ஆர். கோபால் ராவ்**

இணைப்பு - III

# மெட்ராஸ் காங்கிரஸ் சோஷலிஸ்ட் பார்ட்டியின் சார்பில் 13-08-1939-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சி.பி. இளங்கோவின் உரையின் சுருக்கம்.

தான் எப்போது வேண்டுமானாலும் இந்த கூட்டத்தின் நடுவே 144 - உத்தரவின் கீழ் கைது செய்யப்படலாமென சி.பி. இளங்கோ தெரிவித்தார். அன்று காலையில் மதுரையில் நடைபெறுவதாக இருந்த கூட்டத்தில் தனக்கு பேச தடை விதித்திருப்பதாகவும் அந்த கூட்டத்திற்கு தான் போவதற்கான யோசனை இல்லாத போதும் இந்த தடை ஆச்சரியமாக இருப்பதாகவும் சொன்னார். அவரும் அவரது நண்பர்களும் காங்கிரஸ் சார்பாளராக இருந்தபோதும் காங்கிரஸிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படலாம் என்றாலும் தங்கள் நடவடிக்கைகளை நாடு விடுதலை அடையும் வரை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை என அறிவித்தார். பல தியாகிகள், மக்களின் தியாகத்தால் வலிமை பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி திரு. சுபாஷ்சந்திரபோசுக்கு எதிரான தீர்மானத்தை பம்பாய் கமிட்டி கூட்டத்தில் எடுத்தது துரதிர்ஷ்டம் என்றார்.

மகாத்மாகாந்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியும், சமாதான தன்மையை கொண்டிருப்பதாகவும் காங்கிரஸ் சோஷலிஸ்டுகளும், தீவிர கொள்கையாளர்களும் கடுமையாக எதிர்த்ததை, காந்தி கருத்தில் கொள்ளவில்லை என்றும் கடுமையாக விமர்சித்தார். மேலும் சுபாஷ்சந்திரபோஸ் மீது எடுக்கப்பட்ட கமிட்டி நடவடிக்கையான நீக்க உத்தரவு எந்த பத்திரிகைச் செய்தியிலும் பதிவு செய்யப்படவில்லை என அவர் பேசினார்.



இணைப்பு - IV

# திருவண்ணாமலை காங்கிரஸ் சோஷலிஸ்ட் கூட்டத்தில் சி.பி. இளங்கோவின் உரை மொழியாக்கம்

தலைவர்களே, கனவான்களே, நண்பர்களே

எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஜமாதாக்னி ஐரோப்பாவின் போர்ச்சூழலை விரிவாகப் பேசினார். ஹிட்லர் போலந்தை முற்றுகையிட்டிருப்பது, உங்கள் அனைவருக்கும் தெரியும். பிரான்சும், பிரிட்டனும் ஹிட்லருக்கு முடிவு கட்ட முடிவு செய்திருக்கிறது. இது நடை பெறாவிட்டால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நிச்சயம் போர் ஏற்படும் சூழல் உருவாகும். சிறிய நாடுகளின் சுதந்திரம் அபாயத்திற்குள்ளாகும். உலக அமைதி காக்க பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசுகள் கடந்த மூன்றாம் தேதி ஜெர்மனி மீது யுத்த பிரகடனம் செய்திருக்கிறது. இங்கிலாந்துக்கும் போலந்துக்கும் இடையில் நடுநிலையான நிறைய நாடுகள் இருப்பதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். அந்த நாடுகள் வழி படைகள் நடத்திச் செல்லப்பட்டால் அது கடினமான சூழலை உருவாக்கும். ஆதலால் போலந்துக்கு இராணுவ உதவி செய்வது முட்டாள்தனம் என்கிறார். இவரது மூளை ஜெர்மனியின் மீது போர் தொடுக்க முடிவு செய்தபோது எங்கே போனது என்று கேட்கிறேன். திரு. சர்.சி.பியின் பேச்சு நம்மை முட்டாளாக்கும் செயல். போலந்தின் சுதந்திரம் மறுபடி கிடைக்க சாத்தியமேயில்லை. ஒருமுறை போனால் மறுபடி திரும்ப வரவே இயலாத சூழலுக்கு போலந்தின் விடுதலை மாறிவிடும். ஹிட்லர் சமாதான நடவடிக்கைகளை முன்கையெடுத்தபோது ஜெர்மன் துருப்புகளை போலந்திலிருந்து திரும்பப்பெற வலியுறுத்தப்பட்டார். இந்தியா சுயராஜ்ஜியமாக மாற வேண்டுமானால் பிரிட்டிஷ் துருப்புகள் உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும். மாகாண கவர்னர், எரிஸ்கின் பிரபு, வைசிராய், லின்லித்கோ பிரபு, மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், நீதிபதிகள் எல்லோரும் வெளியேற்றப்பட வேண்டும். ஜெர்மனிக்கு ஒரு நீதியென்றால் அதே நீதிதானே பிரிட்டிஷாருக்கும்?

போரைப்பற்றி பேசுவதென்றால் மெட்ராஸ், சேலம் மாவட்ட காவல்துறை எனக்கு, என் பேச்சுக்கு தடைவிதிக்கிறார்கள். இதுவா ஜனநாயகம்? ஜனநாயகம் பிரிட்டனிலோ பிரான்சிலோ . வாழ்கிறதா? இந்தியாவில் ஜனநாயகம் என்பது வெறும் புனைவு. குதிரைக்கு கொம்பு முளைத்தது போன்றது? எதிர்ப்பாளர்கள், கீழ்ப்படிய மறுப்பவர்கள் சிறையில் தள்ளப்படுகிறது தான் ஜனநாயகமா?

எஸ். சத்யமூர்த்தி இந்தப் போரை நியாய மானது என்கிறார். ராமனுக்கும் ராவணனுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கிற நடக்கின்ற போர் என்கிறார். சி. ராஜகோபாலச்சாரியும் இதையே வழிமொழிகிறார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இதுகுறித்து எதுவும் சொல்லவில்லை. ஹிட்லர் ராவணனாம், பிரிட்டிஷ் ராமனாம்.. சரிதான் ராமராஜ்ஜியத்தை பிரிட்டிஷ் ஆள்கிறது.

இந்தப் போரை நமது சுதந்திரத்திற்கான போராட்டமாக நாம் மடைதிருப்ப வேண்டும். சோஷலிஸ்டுகளும், தீவிரபற்றாளர்களும் இதை குறிப்பிடும்போது "சந்தர்ப்பம் வரும் போது, காத்திருந்து தாக்க வேண்டும்" என்பார்கள். நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். சாவுப் படுக்கையில் ஒருவன் கிடக்கும்போது மருந்துகளைக் கொடுத்து உதவலாம். ஆனால்

காலரா போன்ற நோயால் ஒருவன் படுக்கையில் கிடக்கும் போது உடல் சிகிச்சை வேண்டும். அது போலவே இந்த நெருக்கடிச் சூழலில் காங்கிரஸின் முடிவுகளுக்கு எதிராக பேசுவது நம் தலைவர்களுடைய சரியான தேர்வாக இருக்காது.

1927-ல் டாக்டர் அன்சாரி தலைவராக இருக்கும்போது உலகப் போர் மூளுமானால் இந்தியா அதில் பங்கெடுக்கக்கூடாது. இந்தியா தாக்கப்படக் கூடும், என மெட்ராஸ் காங்கிரஸ் முடிவெடுத்தது.

1936-ல் ஹரிபுரா மற்றும் திரிபுரா-வில் போர் என்பது மிரட்டல் இதில் யாரும் பங்கெடுக்கக் கூடாது என முடிவு செய்யப்பட்டது. இப்போது நம் போர்க் கொள்கை என்ன என்பது பற்றி வைசிராயிடம், வொயிற் ஹாலிடமும் கேட்பது தவறானது. இமயம் முதல் குமரி வரை புரட்சி எழ வேண்டும். சுயராஜ்ஜியத்தை கட்டியெழுப்ப வேண்டும். இல்லையெனில் அடிமைகளாக வீழ்வோம். இந்தச்சூழலில் நாட்டு விடுதலைக்காகப் போராடுவதே சிறந்தது. அதை நாம் உடனே துவங்க வேண்டும். மனிதநேயத்தினாலும், கருணையினாலும் மகாத்மா காந்தி பிரிட்டிஷ் பாராளுமன்ற கட்டிடமும் இதர கட்டுமானங்களும் ஹிட்லரின் குண்டுகளால் நொறுக்கப்படுவதை நினைத்து நடுங்குவதாகச் சொல்கிறார். ஆனால் நமது இந்தியர்களின் எலும்புகள் தினம், தினம் நொறுக்கப்படுகிறது. மகாத்மா காந்தி அவர்களே உங்கள் கிழட்டு கண்களால் பார்க்க முடியவில்லையா. இங்கு பலநூறு பேர் பாழுங் கிணற்றில் பசியாலும், பஞ்சத்தாலும் தற்கொலை செய்து கொள்வதை. பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்த தேசத்தின் மக்களின் ரத்தத்தாலும், சதையாலும் கட்டப்பட்டதை ஞாபகம் கொள்ள வேண்டும். மகாத்மா காந்தியிடம் சொல்ல வேண்டும் "உங்களுக்கு இங்கிலாந்தின் கட்டிடங்கள் குறித்து அவ்வளவு அக்கறை இருந்தால் உடனே ஜெர்மனிக்கு புறப்படுங்கள். அங்கு போர் நடக்கும் முனையில் உங்கள் அஹிம்சையை போதியுங்கள். உங்கள் கருணை எங்களுக்கானதல்ல. அவர்கள் கட்டிடங்களுக் கானது. அவர்களுக்கு மனமாற்றத்தை உருவாக்குங்கள். நாங்கள் இங்கே பிரிட்டிஷு-க்கு எதிராகப் போராடி எங்கள் சுதந்திரத்தை கட்டியெழுப்பிக் கொள்கிறோம்" காந்திகள் வருவார்கள் போவார்கள். தாதாபாய் நௌரோஜி வந்தார் சென்றார். பாலகங்காதர திலகர் வந்தார் சென்றார். நிறைய மகாத்மாக்கள் வருவார்கள். நேருகள், சுபாஷ்கள் வந்து மறைவார்கள். ஆனால் இந்த நாடு அடிமைத்தளையில் சிக்கி இருக்கிறது. சுதந்திர தாகம் மறையாது.

பிரிட்டனும் ஜெர்மனியும் இப்போது போரைத் தொடங்கியிருக்கிறது. நாம் தொடங்க வேண்டுமென்றால் அது பிரிட்டிஷு-க்கு எதிராக தொடங்க வேண்டும். சிலர் கேட்கிறார்கள். ஹிட்லர் ஜெயித்து விட்டால் இந்தியாவை ஆக்கிரமிக்க ஹிட்லர் வந்துவிடுவார். இந்தியாவை யார் காப்பது என்று. இரண்டு நாடுகள் போரிட்டால் அவர்கள் மக்களையும், செல்வத்தையும் இழப்பார்கள்.

நம் தேசத்தின் மக்களுக்கு தந்தி சேவையை நிறுத்தத் தெரியும், நம் ஓட்டுனர்கள் வாகனங்களை இயக்க மறுப்பார்கள். மாப்ளா கலகத்தில் மலபாரில் என்ன நடந்தது. அவர்கள் பாலங்களை உடைத்து, மரங்களை வெட்டி சாலைகளை ஸ்தம்பிக்க வைத்தனர். ரிசர்வ் படையினரால் நெருங்க முடியவில்லை யார் அவர்கள். பசியும், பட்டினியுமாக கூலி வேலை செய்த இந்த மண்ணின் மக்கள். புரட்சி தொடங்கி விட்டால் வெற்றி நிச்சயம். இராணுவமும், காவல்துறையும் பிரிட்டனுக்கு உதவும் என்று நினைக்கிறீர்களா? நான் உங்கள் தலையில் அடித்து சத்தியம் செய்கிறேன். அவர்கள் ஒருநாள் மக்களின் பக்கமே நிற்பார்கள். அவர்கள் இந்த நாட்டில் பிறந்து இங்கேயே மரிக்கக் கூடியவர்கள்.

பிரிட்டிஷ் இந்த நாட்டை விட்டு ஓடும்போது இந்த காவல்துறை அதிகாரிகளையும் அவர்கள் நாட்டுக்கு அழைத்துச் செல்வார்களா? உறுதியாக அவர்களை இங்கேயே விட்டுவிட்டுத் தான் செல்வார்கள்.

பெஷாவரில் சுதந்திர போராட்டத்தின்போது இராணுவத்திற்கு சுடும் உத்தரவிட்டபோது அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை தூர எறிந்தார்கள். கார்வாலி வீரர்களும் இதையே செய்தார்கள். அவர்கள் இதயம் கல்லாலும், இரும்பாலும் செய்யப்பட்டதல்ல.

இது ஒரு சந்தர்ப்பம்.....வீட்டில் அவர்கள் சீருடைகளைக் கழற்றும்போது தாய் தந்தையர் கேட்கலாம். பிரிட்டிஷ்காரர்கள் எப்போது நம் நாட்டை விட்டுப் போவார்கள்.

கடந்த போரில் ருஷ்ய ராணுவம் புரட்சியாளர்களோடு சேர்ந்து ஜார் அரசை வீழ்த்தி சோவியத் ருஷ்யாவைக் கட்டியெழுப்பியது. இங்கு புரட்சி நிகழ்ந்தால் வெள்ளை ராணுவத்தை வங்காள விரிகுடாவில் உதைத்துத் தள்ளுவோம்.

ரயில்வே ஊழியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வரி கொடா இயக்கம் நடத்தினால் தான் இங்கு சுதந்திர அரசு உருவாகும்.

இந்த நிமிடத்திலிருந்து திருவண்ணாமலை மக்கள் ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும். "போரில் கலந்து கொள்ளாதீர், போருக்கு உதவாதீர்" வைசிராய் யுத்தத்திற்காக 25000 பேரை நியமிக்கவும். யுத்த நிதி வசூலிக்கவும் அறிவித்திருப்பதை நினைவுகூருங்கள். இந்த போர் நமது சுதந்திரத்திற்கானது அல்ல. ஆகவே நாமிதில் செய்ய ஏதுமில்லை. அரிசி, தயிர், வைக்கோல் எல்லாம் விலையேறி விட்டது. புரட்சிக்கு நாம் தயாரானால் அதுவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முடிவு. ஆகவே "யுத்தத்திற்கு செல்ல மாட்டேன். யுத்த நிதி வாங்க மாட்டோம்" என்போம். யுத்தத்திலிருந்து திரும்புகிறவருக்கு பதக்கம் அளிக்கிறார்கள்; நிலம் அளிக்கிறார்கள். கடந்த யுத்தத்திற்கு சென்றவர்களுக்கு திருநெல்வேலி மலைப்பகுதியில் பத்து ஏக்கர் நிலம் கொடுத்தார்கள். அவர்களோ தங்கள் மனைவியரின் தாலியை விற்று பயிரிட கிளம்பினார்கள். பரிதாபம் நஷ்டம். ஒரு கணவன் யுத்தத்திற்கு புறப்படுகிறான் என்றால் அவன் மனைவியிடம் அவளது தாலியை கழற்றி கணவனிடம் கொடுத்துவிட வேண்டும்.

நமது பலவீனமான மனப்பான்மையே நமது அடிமைத்தனத்திற்கு காரணம். வேலையற்றவர் களும், பசியில் வாடுபவர்களும் கலெக்டர் பங்களாவுக்கும், காவல் நிலையத்திற்கும் சென்று போராட வேண்டும். விவசாயிகள், பஞ்சத்தில் தவிக்கும் வேலையாட்கள் விவசாய வரியை ரத்து செய்யப் போராட வேண்டும். யுத்தத்திற்கான தனிப் படைப்பிரிவை நியமிப்பார்கள். யாரையும் நியமிக்காதபடி கூட்டுப் போராட்டம் தொடங்க வேண்டும். இந்த அரசை எரித்து, புதைக்க வேண்டும். அரசுக்கு எல்லாவித தொந்தரவுகளையும் கொடுக்க வேண்டும். ஒற்றுமை, ஒற்றுமைதான் வேண்டும். நாம் ஒன்றுபட்டால் எவ்வளவு நாட்கள்தான் தேவை இந்த சுயராஜ்ஜியத்திற்கு. திண்டிவனத்தில் கீழ்ப்படியாமை இயக்கத்தின்போது போலீஸ் தடியடி நடத்தியது. ஏன் அடிக்கிறாய்! என்று திருப்பிக் கேட்டால் பயந்து ஓடி விடுவார்கள். நீங்கள் உங்கள் ஒற்றுமையால் பலமான எதிர்ப்பைப் பதிவு செய்தால் காவல் துறையால் எதுவும் செய்துவிட முடியாது.

சிறைப்படுத்தி விடுவார்கள் என்று நீங்கள் பயப்படாதீர்கள். உங்கள் பயத்தை எரிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் அடிமைத்தனத்தை எரிக்கிறீர்கள். சுதந்திரத்திற்காக உயிரை விடுவது பெருமை. ருஷ்யா ஒருபோதும் இந்தியாவைக் கைப்பற்ற போவதில்லை. ஸ்டாலினின் சார்பாக, யுத்த மந்திரியின் சார்பாக, சர்வதேச கம்யூனிஸ்டுகளின் சார்பாக நான் சொல்கிறேன் ருஷ்யா ஒருபோதும் இந்த தேசத்தின் மீது கை வைக்காது. ருஷ்யாவின் அரசியல் நிர்வாகத்தை வருங்கால வரலாற்றாய்வாளர்கள் பாராட்டுவார்கள். இந்தியா சுயராஜ்ஜியத்தை அடைந்து விட்டால் இனி உலகில் யுத்தமே நடைபெறாது. அப்படியே நடைபெற்றாலும் ருஷ்யா, சீனா, இந்தியா ஒன்றிணைந்தால் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, நார்வே, அமெரிக்கா மற்றும் எந்த நாடுகளும் தலையெடுக்க முடியாது. அவர்கள் தலைகள் நொறுக்கப்படும்.

இந்தச் சூழலில் இந்தியா விடுதலைக்காக போரிட்டே ஆகவேண்டும். பிரிட்டிஷ் அரசுக்கு உதவக் கூடாது. கடந்த யுத்தத்தில் மகாத்மா காந்தி வீரர்களையும், செல்வத்தையும் அனுப்பியதற்கு பதில் நாம் பெற்றது என்ன? பஞ்சாப் துயரம். தனி நாடு அந்தஸ்தின் சத்தியம் அழிக்கப்பட்டதுதானே?

இந்த அரசுக்கு எத்துணை துன்பம் விளைவிக்க முடியுமோ அவ்வளவு தொந்தரவு கொடுங்கள். கடைசியாக ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நானிங்கே ஒரு இராணுவ நியமன அதிகாரியாக வந்திருக்கிறேன். பிரிட்டிஷ் சார்பாக அல்ல என் தேசத்திற்காகப் போராடும் என் நாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்க வந்திருக்கிறேன். விருப்பமுள்ளவர்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள்.

இணைப்பு - V

# 13-10-1939 தேதியிட்ட தர்மபுரி காவல்துறை உதவி ஆய்வாளர் அறிக்கை

ஜனசக்தி பத்திரிகையின் உதவியாசிரியர் திரு. இளங்கோ த/பெ பிரம்மநாயகம் பிள்ளை. சென்னையில் வசிக்கும் இவர் நேற்று சேலத்திலிருந்து தர்மபுரி வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பாக நடைபெற்ற கூட்டத்திற்கு உரையாற்ற வந்திருக்கிறார். கூட்டத்திற்கு திரு. சிவசங்கர சாஸ்திரி (ஓய்வுபெற்ற தாசில்தார்) தலைமை தாங்கினார்.

இளங்கோ பேசும்போது அரசின் யுத்தக் கொள்கை குறித்தும் கிருஷ்ணகிரியில் தற்போது நடைபெறும் பணிநியமனம் குறித்தும் சுட்டிக் காட்டினார். இந்நிலையில் திரு. சிவசங்கர சாஸ்திரி இளங்கோ அவர்கள் பேசுவது இந்திய இராணுவ பாதுகாப்பு விதிக்கு எதிரானது என்றும் ஆகவே பேச்சை வேறு பொருளில் தொடருமாறும் வலியுறுத்தினார். பேச்சாளர் அதைக் கண்டு கொள்ளாததோடு அரசின் யுத்தக் கொள்கை குறித்துத் தான் 13-10-'39 அன்று மாலை வேறொரு கூட்டத்தில் பேசுவதாகவும், தெரிவித்தார். இதனிடையே கூட்டத் தலைவர் அரங்கிலிருந்து வெளியேறிவிட்டார்.

இன்று காலை திரு. இளங்கோ அவர்களை நானும் வட்டார ஆய்வாளரும் சென்று விளக்கம் கேட்ட போது. அவர் தீர்மானமாக அரசின் போர்க் கொள்கை குறித்து சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாக நடைபெறும் கூட்டத்தில் திட்டவட்டமாக உரையாற்றுவதாகத் தெரிவித்தார்.

தர்மபுரியைச் சேர்ந்த மனு எழுத்தரும் வக்கீல் குமஸ்தாவுமான திரு. நாராயணசாமி ஐயர் என்பவர் இளங்கோவின் சொற்பொழிவு பங்கேற்பு பற்றிய துண்டு பிரசுரங்களை மக்களிடம் விநியோகித்திருந்தார்.

நானும் என் சக பணியாளர்களும் நெருக்கடி நேரிடும் பட்சத்தில் சமாளிப்பதற்கான தயாரிப்புகளோடு பொதுக்கூட்ட மைதானத்திற்கு இன்று மாலை சென்றிருந்தோம்.

கூட்டம் 5.45 மணிக்குத் தொடங்கியது நாராயணசாமி ஐயர் தலைமையில் டி.பி. கேசவலு நாயுடு அவர்கள் முன்னிலையில் தொடங்கியது. இளங்கோ தன்னுடைய பேச்சில் காங்கிரஸ் கட்சி சுயராஜ்ஜியத்திற்காக எவ்வாறு எல்லா தளங்களிலும் பாடுபட்டது. பிறகு தற்போது அரசில் இடம்பெற்றதன் மூலம் அது தன் வீரியத்தை இழந்துவிட்டது என்பதையும் குறிப்பிட்டார். அரசோடு இணைந்து ஒத்துழைக்கும் தன்மையைக் காங்கிரஸ் நிபந்தனையற்ற நிலையில் ஒப்புக் கொண்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் கடும் எதிர்ப்பு வலுத்தபோதும் திரு. சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் சிலர் மறுத்தபோதும் அகில இந்திய காங்கிரஸ் வொர்க்கிங் கமிட்டித் தீர்மானத்தை நிறைவேற்றியதோடல்லாமல் சுபாஷ் உட்பட சிலரை வெளியேற்றிவிட்டதைக் குறிப்பிட்டார். காங்கிரஸ் சோஷலிஸ்ட் உறுப்பினர்களும் காங்கிரஸ்காரர்கள் தான் ஆனால் வேறுபட்ட கருத்தியல் கொண்டவர்கள் என்றார் அவர்.

பிறகு அவர் கூறும்போது இந்தியர்கள் படைக்கு அஞ்சுபவர்கள். பிரிட்டிஷ் படையால் பலலட்சம் இந்தியர்களை என்ன செய்ய முடியும். குண்டுகளால் குறைந்த சேதாரத்தையே ஏற்படுத்த முடியும் என்றார்.

ராமாதுர்க் மகாணத்தில் நடந்த ஒரு நிகழ்வைக் குறிப்பிடும்போது. அங்கு தேசியகொடி

ஏற்ற மக்கள் அனுமதி மறுக்கப்பட்டிருந்தனர். சுற்றுவட்டார மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அரசை மீறி கொடியேற்றிய விதத்தை குறிப்பிட்டார். மாப்பிள்ளை கலகம் (MAPLA REVOLT) பற்றி பேசிய இளங்கோ பிரிட்டிஷார் அந்நிகழ்வில் பயந்ததைக் கோடிட்டு காட்டினார். மேலும் மரணம் ஒருமுறையே வரும். மரணத்துக்கு பயப்படவேண்டாம். விடுதலைக்காக மரணிப்பது பெருமையே என்றார்.

பிரிட்டிஷாரின் பிரதான நோக்கம் நம் செல்வங்களைக் கொள்ளையடிப்பதும், வளங்களைச் சுரண்டுவதுமே ஆகும். இந்திய மக்களை அழிப்பதற்காகவும் அவர்கள் வரவில்லை. நம் உழைப்பையும், வளங்களையும் சுரண்டவே வந்தனர். ஆகவே உயிரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். மேலும் இந்திய மக்கள்தொகை பெரியது. நம் அனைவரையும் சிறையிலிட்டு, உணவளிப்பது முடியாத காரியம். எனவே நம் மக்கள் அனைவரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்து வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிய வேண்டும் என்றார்.

யுத்தத்தின் காரணம் பற்றி அடுத்ததாகச் சொல்லும்போது பிரிட்டன் போலந்து மேலுள்ள அக்கறையில் இந்த யுத்தத்தை அறிவிக்கவில்லை. ஜெர்மனியின் வலிமையைக் குறைக்கவும், ஒரு போட்டியாளராக ஜெர்மனி வளர்வதைத் தடுக்கவுமே இந்தப் போரை பிரிட்டன் தொடங்கி வைக்கிறது என்றார். நியாயப்படி தங்கள் துருப்புகளை சித்ரவதை செய்த ஜப்பான் மீதுதான் பிரிட்டன் போர் தொடுத்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பீட்டளவில் ஜப்பான் வலிமையற்றது என்பதே ஜெர்மனியின் மீதான போர் பிரகடனத்திற்குக் காரணம் என்றார்.

அடுத்ததாக யுத்தத்திற்கென மக்கள் பிரிட்டிஷ்காரர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார். இராணுவப் பணிகளில் இளைஞர்களைப் பங்கெடுக்க விடவேண்டாம் என்றும் அவர்களுக்கு யுத்தத்தில் ஏற்படும் பணி துயரங்கள், நெருக்கடிகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். திரளாக எல்லா மக்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக பணியிடங்கள், இராணுவப் பணி நியமன இடங்கள், எல்லா வழிமுறைகள் சுவரெழுத்து, போஸ்டர்கள் மூலமாகவும் போராட வேண்டும் என்றார். புதிதாய்த் தொடங்கவிருக்கும் இராணுவப் படையில் ஆட்சேர்ப்புக்கு நம்மாலான தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்றார். கூட்டம் நடைபெற்ற இடத்தினருகில் தர்மபுரி மாவட்ட மாஜிஸ்திரேட்டும், காவல்துறை ஆய்வாளரும் ஆஜராகியிருந்தார்கள். மாஜிஸ்திரேட் சொற்பொழி வாளருக்கு எச்சரிக்கை துண்டறிக்கையொன்றை அனுப்பினார்... அதனைப் பெற்றுக்கொண்ட இளங்கோ அதைக் கிண்டல் செய்து பொது மக்களிடம் இதுபோன்ற பல எச்சரிக்கைகளை கடந்து வந்திருக்கிறேன். பலவற்றையும் மீறி இருக்கிறேன் என்றார். இந்த நிலையில் மக்களிடையே கூச்சல் எழுந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒழிக என்று ஐந்தாறுமுறை இளங்கோ கோஷம் எழுப்பினார். மக்களும் அவரைத் தொடர்ந்து கோஷம் எழுப்பினர்.

ஏறக்குறைய 500 மக்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். நடுத்தர வர்க்க மக்களும் சில பெண்களும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் தர்மபுரியைச் சேர்ந்த மருத்துவர் திரு. தர்மலிங்கம் தீவிரமான பங்கேற்பு செய்தார். அவரும் ஒரு சோஷலிஸ்ட். கூட்டம் இரவு 8.15 முடிவடைந்தது. இளங்கோவின் உரை மிகுந்த வரவேற்பையும், கிளர்ச்சியையும் ஊக்குவிப்பையும் தூண்டுவதாக அமைந்தது.

13-10-39 **உதவி ஆயவாளர்**

தர்மபுரி

அரசு ஆவணங்களை தமிழில் மொழியாக்கம் செய்தவர் **சிவசங்கர் எஸ்.ஜே.**



சி.பி. இளங்கோ மகன் பரமேஸ்வரன்-சத்யா மணநாள் புகைப்படம் ஜீவாவின் மகன் மணிக்குமார் குடும்பத்துடன் உள்ளார். சி.பி. இளங்கோ மனைவி சரஸ்வதி உள்ளனர். அருகில் டாக்டர். எஸ்.ஆர்.கே.



சி.பி. இளங்கோ மகன் பரமேஸ்வரன் மருமகன் சத்யா பேரன் கார்த்திக் இளங்கோ



சி.பி இளங்கோ மூத்த மகன் சந்திரமோகன் - இளங்கோ மகன் பொறியாளர் லெட்சுமணன் நிச்சயதாம்பூல நிகழ்ச்சியின்போது எடுத்தப் படம்.



சி.பி இளங்கோ மகன் பொறியாளர் லெட்சுமணன் திருமணப் புகைப்படம்: இடமிருந்து R. ரெத்தினராஜ் Ex. M.L.A, M.C. பாலன் லெட்சுமணன் - ஷீபா, இளங்கோ



சி.பி. இளங்கோ மகன் ராமச்சந்திரன் - அனந்தலெட்சுமி திருமண வரவேற்பு நிகழ்ச்சி



தியாகி. சி.பி. இளங்கோ மகன் ராமசந்திரன் - மருமகள் அனந்தலெட்சுமி பேத்திகள் சரஸ்வதி அபர்ணா



சி.பி இளங்கோ மகன் ஜீவா - மருமகள் லதா குழந்தைகள்
லெட்சுமிப்பிரியா - சிந்துஜா



சி.பி. இளங்கோ மகன் பொறியாளர் விஸ்வநாதன் திருமண புகைப்படம்
இடமிருந்து பொறியாளர் லெட்சுமணன் சி.பி. இளங்கோ
விஸ்வநாதன், சுதா, தாயார் சரஸ்வதி



சி.பி. இளங்கோ தனது மைத்துனர் ஜெனார்த்தனுடன் மகன்
கோபால் திருமணநேரம் ஆலப்புழையில் எடுத்த புகைப்படம்




சி.பி. இளங்கோ மகன் விஸ்வநாதன் மருமகள் சுதா
பிள்ளைகள் தீப்தி - ஆர்த்தி



அருணாலெட்சுமி சி.பி இளங்கோவின் முதல் பேத்தி

## பொது நிகழ்ச்சிகளில் இளங்கோ



சி.பி. இளங்கோ வழிகாட்டுதலில் சந்திரமோகன் தலைமையில் கிராம விழிப்புணர்வுப் பணியில் ஈடுபடும் குழு. இளங்கோ அருகில் கே.பி.கே. உள்ளார்




கானி மக்களுக்கு வெள்ள நிவாரண உதவி வழங்கும் விழாவில் சி.பி. இளங்கோ கானி மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறார்.



திட்டுவிளை மக்கள் பாதுகாப்பு பேரவை பொதுக்கூட்டம் சி.பி இளங்கோ தலைமையில் மாநில பனைத்தொழிலாளர் சங்கதலைவர் பொன்மணி உரையாற்றுகிறார்.




திட்டுவிளை மக்கள் பாதுகாப்பு பேரவைக் கூட்டம் - சி.பி இளங்கோ - ஒய். டேவிட் டெய்லர் தாசன் உரையாற்றுகிறார்.




திட்டுவிளை மக்கள் பாதுகாப்பு பேரவை பொதுக்கூட்டம் சி.பி. இளங்கோ தலைமையில் ஆர். ராஜையா உரையாற்றுகிறார்.



திட்டுவிளையில் மக்கள் பாதுகாப்பு பேரவைப் பொதுகூட்டம் சி.பி இளங்கோ தலைமையில் வழக்கறிஞர் பாஜனாதிபதி உரையாற்றுகிறார்.



1937-இல் ஜீவா, சீனிவாசராவ், சி.பி. இளங்கோ



1942-இல் ஜீவா, சி.பி. இளங்கோ

# சுதந்திரப் போராட்ட தியாகி சி.பி. இளங்கோ மரணம்

நாகர்கோவில், ஜூலை 31, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகி சி.பி. இளங்கோ உடல்நலக்குறைவால் நேற்று நாகர்கோவிலில் காலமானார்.

சி.பி. இளங்கோ கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுகாவில் உள்ள சிறமடம் என்ற இடத்தில் 1915-ம் ஆண்டு பிறந்தார். சிறு வயது முதலே இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்து பலமுறை சிறை சென்றுள்ளார்.

1933-ல் இருந்து தொழிலாளர் சங்க நடவடிக்கைகளில் பங்கு கொண்டார். 1935-ல் ஆங்கிலேயர் உத்தரவை மீறியதற்காக குண்டூரில் கைது செய்யப்பட்டு ராஜமுந்திரி ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1943-ல் தெரிசனங்கோப்பில் காந்தி ஜெயந்தியை கொண்டாடியதால் திருவிதாங்கூர் மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1947-ல் சுசீந்திரத்தில் தேரில் தேசியக் கொடியை ஏற்றியதற்காக தாக்கப்பட்டு அவரது வலது கை நடுவிரல் ஊனமாகியுள்ளது.

1972-ம் ஆண்டில் இந்திய சுதந்திர வெள்ளிவிழா ஆண்டை ஒட்டி தியாகி சி.பி. இளங்கோ மற்றும் தியாகி கும்பலிங்கம் பிள்ளை ஆகியோருக்கு அப்போதைய பிரதமர் இந்திரா தாமிரப்பட்டயம் வழங்கி கவுரவித்தார்.

கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக உடல்நலம் பாதிப்படைந்த அவர் நாகர்கோவிலில் வடிவீஸ்வரம் யாதவர் தெருவில் உள்ள வீட்டில் நேற்று காலமானார். அவருக்கு வயது 86. சி.பி. இளங்கோவிற்கு ஏ. சரஸ்வதி என்ற மனைவியும், சந்திரமோகன், ஸ்டாலின், கோபால், பரமேஸ்வரன், லட்சுமணன், சந்துரு, ஜீவா, விசு ஆகிய எட்டு ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.

சி.பி. இளங்கோவின் உடல் இன்று மாலை 3 மணிக்கு வடிவீஸ்வரத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சிவலிங்கம் பிள்ளை மயானத்தில் அடக்கம் செய்யப்படுகிறது.

திருவனந்தபுரத்தில் 'தினமலர்' நாளிதழ் ஆரம்பித்த காலத்தில் சி.பி. இளங்கோ நாகர்கோவில் பகுதிநேர நிருபராக பணியாற்றியுள்ளார்.

**தினமலர் சென்னை பதிப்பு**

# சுதந்திரப் போராட்ட தியாகி சி.பி. இளங்கோ மரணம்

நாகர்கோவில், ஜுலை 31, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகி சி.பி. இளங்கோ உடல்நலக்குறைவால் நேற்று நாகர்கோவிலில் காலமானார்.

சி.பி. இளங்கோ கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுகாவில் உள்ள சிறமடம் என்ற இடத்தில் 1915-ம் ஆண்டு பிறந்தார். சிறு வயது முதலே இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்து பலமுறை சிறை சென்றுள்ளார்.

1933-ல் இருந்து தொழிலாளர் சங்க நடவடிக்கைகளில் பங்கு கொண்டார். 1935-ல் ஆங்கிலேயர் உத்தரவை மீறியதற்காக குண்டூரில் கைது செய்யப்பட்டு ராஜமுந்திரி ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1943-ல் தெரிசனங்கோப்பில் காந்தி ஜெயந்தியை கொண்டாடியதால் திருவிதாங்கூர் மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1947-ல் சுசீந்திரத்தில் தேரில் தேசியக் கொடியை ஏற்றியதற்காக தாக்கப்பட்டு அவரது வலது கை நடுவிரல் ஊனமாகியுள்ளது.

1972-ம் ஆண்டில் இந்திய சுதந்திர வெள்ளிவிழா ஆண்டை ஒட்டி தியாகி சி.பி. இளங்கோ மற்றும் தியாகி கும்பலிங்கம் பிள்ளை ஆகியோருக்கு அப்போதைய பிரதமர் இந்திரா தாமிரப்பட்டயம் வழங்கி கவுரவித்தார்.

கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக உடல்நலம் பாதிப்படைந்த அவர் நாகர்கோவிலில் வடிவீஸ்வரம் யாதவர் தெருவில் உள்ள வீட்டில் நேற்று காலமானார். அவருக்கு வயது 86. சி.பி. இளங்கோவிற்கு ஏ. சரஸ்வதி என்ற மனைவியும், சந்திரமோகன், ஸ்டாலின், கோபால், பரமேஸ்வரன், லட்சுமணன், சந்துரு, ஜீவா, விசு ஆகிய எட்டு ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.


சி.பி. இளங்கோவின் உடல் இன்று மாலை 3 மணிக்கு வடிவீஸ்வரத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சிவலிங்கம் பிள்ளை மயானத்தில் அடக்கம் செய்யப்படுகிறது.

திருவனந்தபுரத்தில் 'தினமலர்' நாளிதழ் ஆரம்பித்த காலத்தில் சி.பி. இளங்கோ நாகர்கோவில் பகுதிநேர நிருபராக பணியாற்றியுள்ளார்.

**தினமலர் சென்னை பதிப்பு**



தியாகி சி.பி. இளங்கோ நூற்றாண்டு விழாவையொட்டி இளங்கோவின் பேரன் ஆகாஷ்
இளங்கோ தாத்தா சிலைக்கு மாலை அணிவித்து விழாவினை துவக்குகிறார்.



# COMORIN INTERNATIONAL SCHOOL,

Aralvaimozhy, Kanyakumari Dist.
Tamil Nadu, India.